a monthly information digest இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி

ஜூன் 2023 June | இதழ் 388 Issue

# தமிழர் தகவல்

TAMILS' INFORMATION

ESTD From The Community To The Community 1991

Premier Canadian Tamil Journal



கனடாவில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்



ஈழநல்லூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி

## தமிழர் தகவல் 32வது ஆண்டு
## விருது விழாவும் ஆண்டு மலர் வெளியீடும்

**ஜூலை 8 சனிக்கிழமை - ரொறன்ரோ நகர மண்டப சபாபீடம்**

சமூகத்துடன் இணைந்த வளர்ச்சி ஸ்தாபிதம் -1991

33வது ஆண்டில் 33rd Year

Growing with the Community ESTD-1991

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box-3, Station F
Toronto, ON M4Y-2L4,
Canada

தொலைபேசி:
416 920 9250

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
ரஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

பொது முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
என். விமலநாதன்
என். குமரதாசன்
இ. சிவலிங்கம்
வே. விவேகானந்தன்
ப. சிவசுப்பிரமணியம்

தொழில்நுட்ப உதவி
ஹரன்கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

இணையம்
www.tamilsinformation.info

*ஆசிரியரிடமிருந்து...* **From the Editor**

# தன்னாலே வெளிவரும் உண்மை!

இலங்கையில் கடந்த 70 ஆண்டுகளாக தமிழர் மீது நடத்தப்பட்ட படுகொலைகள் இனஅழிப்பா இல்லையா என்ற விவாதம் இப்போது சூடு பிடித்துள்ளது.

முள்ளிவாய்க்கால் கொடூரங்களை அடுத்து ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் தொடர்ச்சியாக பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பொறுப்புக்கூறல், சர்வதேச நீதி விசாரணைப் பொறிமுறை ஆகியவற்றுக்கு உடன்பட்டு தீர்மானத்துக்கு அனுசரணை வழங்கிய இலங்கை அரசு பின்னர் அதிலிருந்து விலகிக் கொண்டது.

ஜெனிவா தீர்மானங்களுக்கு முன்னின்று ஆதரவு வழங்கிய நாடுகளில் கனடா எப்போதும் முதன்மையானது. இலங்கை மீது நம்பிக்கையையும் பொறுமையையும் இழந்த கனடிய அரசு கடந்த வருடம் நாடாளுமன் - றத்தில் இனப்படுகொலை தீர்மானத்தை நிறைவேற்றியது. கடந்த மாதம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு கனடிய பிரதமர் ஜஸ்ரின் ரூடோ விடுத்த அறிக்கை இலங்கை அரசின் இனப்படுகொலையை மேலும் வலியுறுத்தியது. புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களில் கூடுதலான - வர்கள் வாழும் நாடு கனடா எனும் வகையில், பிரதமர் ரூடோ தார்மிக ரீதியில் இனப்படுகொலையை சுட்டிக்காட்டியது தவிர்க்க முடியாதது.

உண்மையை உண்மையாகச் சொன்ன ரூடோ மீது இலங்கையின் கண்டனக் கணைகள் பாயத் தொடங்கியுள்ளன. முள்ளிவாய்க்கால் போரில் அப்பாவித் தமிழர் ஒருவர்கூட கொல்லப்படவில்லையென்று கூறிய அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, இப்போது போரில் மக்கள் இறந்திருக்கலாமென்று கருத்து வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்றி கொழும்பிலுள்ள கனடிய தூதுவரை அழைத்து பிரதமர் ரூடோவின் அறிக்கைக்கு அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார். கொழும்பிலுள்ள கனடிய தூதரகத்தின் முன்னால் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

சிங்கள எம்.பிக்கள் சிலர் கனடிய அரசைக் கண்டித்து அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றனர். விமல் வீரவன்ச என்ற ஜே.வி.பி.யின் முன்னாள் தலைவர் தமது பங்குக்கு, கனடாவில் பூர்வீக குடிகளை இனப்படுகொலை செய்ததை கண்டித்து கனடிய அரசுக்கு எதிரான கண்டனப் பேரணி ஒன்றை நடத்தப் போகிறாராம்.

இது எதனைத் தெரியப்படுத்துகிறது? இலங்கையில் இடம்பெற்றவை இனப்படுகொலைதான் என்பதை சொல்லாமல் சொல்வதாகவே விமல் வீரவன்சவின் அறிக்கை அமைந்துள்ளது. அதாவது, தமிழர் மீதான இனப்படுகொலையை சமப்படுத்தவே கனடாவின் பூர்வீகக் குடிகள் மீதான இனப்படுகொலையை கண்டிக்க வேண்டுமென்பதே இதன் அர்த்தம்.

பிரதமர் ரூடோ தெரிவித்த இலங்கையின் இனப்படுகொலை அறிக்கையை மூடி மறைத்த அந்நாட்டின் பிரதான ஆங்கில - சிங்கள ஊடகங்கள், ரூடோவைக் கண்டிக்கும் வகையான அறிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து இலங்கையின் இனப்படுகொலை சர்வதேசத்தில் பேசப்படுகிறது என்பதை அம்பலப்படுத்தி வருகின்றன.

'தன்னாலே வெளிவரும் உண்மை' என்பது இதுதான்!

**திரு எஸ். திருச்செல்வம்**

ISSN 1206-0585

**Established**
February 1991

P.O. Box-3, Station F
Toronto, ON M4Y-2L4,
Canada

Tel: 416 920 9250

**E-mail**
tamilsinfo@sympatico.ca

**Produced by**
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

**Published by**
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editor and Production Manager**
Sasi Pathmanathan

**Assistant Editors**
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

**General Manager**
R. R. Rajkumar

**Public Relation**
N. Vimalanathan
N. Kumaradasan
R. Sivalingam
V. Vivekananthan
P. Sivasubramaniam

**Technical Support**
Haran Graph

**Monthly**
5000 Copies

**Annual**
6000 Copies

**Website**
www.tamilsinformation.info

## றொறன்ரோ தேர்தலில் முன்னணியில் நிற்கும் ஆறு வேட்பாளர்கள்



ஒலிவியா செள



மார்க் செளன்டர்ஸ்



மிற்சி ஹன்டர்



ஜோஷ் மற்லோ



பிராட் பிராட்ஃபோர்ட்



அனா பைலோ

# றொறன்ரோ நகர முதல்வர் தேர்தலில் தமிழர் இருவர் உட்பட முதன்முறையாக 102 வேட்பாளர்

## 26ம் திகதி திங்கட்கிழமை வாக்களிப்பு நாள்

ஜோன் ரோறியின் பதவி விலகலால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்கு இந்த மாதம் 26ம் திகதி இடம்பெறவுள்ள றொறன்ரோ நகர முதல்வர் (மேயர்) தேர்தலில் மொத்தம் 102 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். தேர்தல் வரலாற்றில் இதுவே முதன்முறையாக ஆகக்கூடியவர்கள் இத்தேர்தலில் போட்டியிடுவது.

நாடாளுமன்ற மற்றும் ஒன்ராறியோ மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள், றொறன்ரோ நகர சபையின் முன்னாள் உறுப்பினர்கள், தற்போதைய உறுப்பினர்கள் என போட்டியாளர்களின் கலவை வித்தியாசமாக அமைந்துள்ளது.

என்.டி.பி. தலைவராகவிருந்த ஜாக் லெய்ட்டனின் மனைவி ஒலிவியா செள இந்த மாதம் முதலாம் வாரம்வரையான கருத்துக் கணிப்புகளில் முதலிடத்தில் காணப்படுகின்றார். இவரும் முன்னர் நாடாளுமன்ற உறுப்பினராகவும் றொறன்ரோ நகர சபையின் உறுப்பினராகவும் இருந்தவர். கருத்துக் கணிப்பில் இரண்டாம், மூன்றாம் இடங்களில் முறையே றொறன்ரோவின் முன்னாள் பொலிஸ் அதிபர் மார்க் செளன்டர்ஸும், ஸ்காபரோ - கில்வூட் தொகுதி மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான மிற்சி ஹன்டரும் உள்ளனர்.

அடுத்த மூன்று இடங்களில் றொறன்ரோ நகர சபை உறுப்பினர்களாக அனுபவம் பெற்ற ஜோஷ் மற்லோ, பிராட் பிராட்ஃபோர்ட், அனா பைலோ காணப்படுகின்றனர். கிரி வடிவேலு, றக்சினி சிவனேஸ்வரன் ஆகிய இரு தமிழர்கள் இப்போட்டியில் பங்குபற்றுவது குறிப்பிடத்தக்கது. எனினும் இவர்கள் பற்றிய போதிய அறிமுகமும் பரப்புரையும் இதுவரை றொறன்ரோ தமிழ் சமூகத்திடையே காணப்படவில்லை.

கனடியரான 18 வயது பல்கலைக்கழக மாணவர் ஒருவர் துணிச்சலாக இப்போட்டியில் இணைந்துள்ளார். இந்தத் தேர்தலிலேயே இவர் முதன்முறையாக வாக்களிக்க இருப்பது குறிப்பிடத்தக்கது.

றொறன்ரோ நகர முதல்வர் தேர்தலில் தாம் தலையிடப் போவதில்லையென மாகாண முதலமைச்சர் டக் ஃபோர்ட் ஆரம்பத்தில் தெரிவித்திருந்தார். எனினும், தமது கன்சர்வேடிவ் கட்சிப் பிரமுகரான முன்னாள் பொலிஸ் அதிபர் மார்க் செளன்டர்ஸின் வெற்றிக்காக அவர் பாடுபடுவதாக முன்னணி வேட்பாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். ஜோன் ரோறி நகர முதல்வராக இருந்தபோது Strong Mayor எனும் அதிகூடிய அதிகாரத்தை வழங்கும் சட்டத்தை நிறைவேற்றியபோது, ரோறி பதவி விலக நேருமெனவும் இடைத்தேர்தல் வருமெனவும் எவரும் எதிர்பார்க்கவில்லை. இதனால், இடதுசாரிக் கொள்கையுடைய ஒருவர் புதிய நகர முதல்வராக தெரிவு செய்யப்படுவதை விரும்பவில்லையென டக் ஃபோர்ட் தெரிவித்திருக்கும் கருத்து தேர்தல் வேட்பாளர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

102 வேட்பாளர்களின் பெயர்களும் வாக்குச்சீட்டில் இடம்பெறுவதால் இம்முறை தாம் விரும்பும் வேட்பாளர்களின் பெயர்களை கண்டுபிடிக்க வாக்காளர்களுக்கு அதிக நேரம் எடுக்கக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேசமயம் வாக்களிப்பின்போது நிராகரிக்கப்படும் வாக்குகள் அதிகரிக்கலாமெனவும் எதிர்வுகூறப்படுகிறது.

இத்தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர் கட்டுப்பணம் 200 டாலர்கள். அத்துடன் 25 வாக்காளர்கள் வேட்புமனுவில் ஒப்பமிட வேண்டும். கட்டுப்பணத்தை ஆயிரம் டாலர்களாக்கி ஆயிரம் வாக்காளர்கள் ஒப்பமிட வேண்டுமென மாற்றத்தை ஏற்படுத்தினால் போட்டியிடுவோர் தொகையை மட்டுப்படுத்தலாமென றொறன்ரோவின் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த மாதம் 8ம் திகதி முதல் 13ம் திகதி வரை காலை பத்து மணியிலிருந்து மாலை ஏழு மணிவரையும் முற்கூட்டிய வாக்களிப்பு இடம்பெறும். தேர்தல் நாளான 26ம் திகதி திங்கட்கிழமை காலை பத்து மணிமுதல் மாலை எட்டு மணிவரை நேரடி வாக்களிப்பு இடம்பெறும்.



எல்.தி..



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

பூமிக்கு மேலே விண்வெளியில் திருமண சடங்கு சேவையை அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்பிக்ரிவ் ஸ்பேஸ் என்ற நிறுவனம் நடத்த முன்வந்தள்ளது. இளைய தலைமுறையினர் தங்கள் திருமணங்களை நவீன முறையில் செய்ய விரும்புவதை அடிப்படையாக வைத்து 2024ம் ஆண்டிலிருந்து இந்தச் சேவையை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. பிரத்தியேக பலுான்களில் தம்பதியினரை விண்வெளிக்கு ஏற்றிச் சென்று திருமணத்தை நடத்தி முடிக்க பல லட்சம் டாலர் கட்டணமாக அறிவிடப்படுமென அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

நைஜீரியாவைச் சேர்ந்த 27 வயதுப் பெண்ணொருவர் 100 மணித்தியாலங்கள் தொடர்ந்து சமையல் செய்து சாதனை படைத்துள்ளார். சமூகவியல் பட்டதாரியும் சமையற்கலை நிபுணருமான ஹில்டா பாசே என்ற இந்தப் பெண் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உணவுகளென 100 வகையான உணவுகளை 100 மணித்தியாலங்களில் சமைத்து அனைவரதும் பாராட்டைப் பெற்றுள்ளார். இதற்கு முன்னர் இந்தியப் பெண் லதா டான்ரனின் 88 மணிநேர சாதனையை ஹில்டா முறியடித்துள்ளார்.

தாயின் கர்ப்பத்தில் 3 மாத கருவாக இருந்த குழந்தைக்கு தாயின் கருவறைக்கூடாக சத்திரசிகிச்சை செய்து புதிய சாதனையொன்றை புதுடில்லி எய்ம்ஸ் மருத்துவமனை நிகழ்த்தியுள்ளது. ஏற்கனவே மூன்று தடவை கருச்சிதைவு கண்ட இந்தப் பெண்மணிக்கு மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சையே உலகில் முதன்முறையாக மேற்கொள்ளப்பட்டதென அறிவிக்கப்பட்டது. மிகச் சவாலான இந்தச் சத்திரசிகிச்சையை இதயவியல் மற்றும் இதய மயக்க மருத்துவ நிபுணர்கள் என சுமார் 20 பேர் கூட்டாகச் சேர்ந்து மேற்கொண்டு வெற்றி கண்டுள்ளனர்.

விசித்திரமான ஆனால் விநோதமான முறையில் இந்தியாவின் திருப்பரங்குன்ற மலையில் களவொன்று இடம்பெற்றுள்ளது. இங்குள்ள காசி லிங்கநாதர் ஆலயத்துக்கு இரவு வேளையில் சென்ற திருடர்கள், முதலில் ஆலய வாசலில் வைக்கப்பட்டிருந்த திருநீற்றை எடுத்து நீரில் சேர்த்துக் குழைத்து அதனை சி.சி.ரி.வி. கமராவுக்குப் பூசி அதன் செயற்பாட்டை மறைத்துவிட்டனர். அதன் பின்னர் உள்ளே புகுந்து 3 அடி உயரமான வெள்ளி வேல் உட்பட குத்துவிளக்குகள், தட்டங்கள் என பல பொருட்களை அள்ளிச் சென்றுள்ளனர். இதனைத் தொடர்ந்து ஆலயத்துக்கு வெளியே பிரசாதங்கள் வைப்பதை நிர்வாகம் நிறுத்தியுள்ளது.

உலகின் பெரும் செல்வந்தர் எலோன் மஸ்கிற்கு சொந்தமான ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் புதிய ராட்சத ரொக்கட்டான ஸ்டார்ஷிப் தனது முதல் பயணத்தில் நடுவானில் வெடித்துச் சிதறியுள்ளது. அமெரிக்காவில் ரெக்சாஸ் கிழக்கு கடற்கரையில் கடந்த மாதம் 26ம் திகதி சோதனை முயற்சியாக ஆளில்லாமல் இந்த ரொக்கட் ஏவப்பட்டது. இதுவரை உருவாக்கப்பட்ட ரொக்கட்டுகளில் மிகப்பெரியதான இது 2, 3 நிமிடங்கள் மட்டுமே பறந்த நிலையில் கட்டுப்பாட்டை இழந்து வெடித்தது. அடுத்த சில மாதங்களில் மீண்டும் முயற்சி மேற்கொள்ளப்படுமென மஸ்க் அறிவித்துள்ளார்.

## கவிதை நூல் வெளியீடு

எழுத்தாளர் க.நவம் அவர்களின் 'எனினும் நான் எழுதுகின்றேன்' என்ற கவிதை நூலின் வெளியீடு இந்த மாதம் 24ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2:30 மணிமுதல் ஸ்காபரோ சிவிக் சென்ரரில் இடம்பெறவுள்ளது. நவம் அவர்களின் 54 சமகால ஆங்கில கவிதைகளும் மொழியாக்கம் செய்த அவற்றுக்கான தமிழ் கவிதைகளும் அடங்கியது இந்நூல். மேலதிக விபரங்களுக்கு 416 821 5773, 647 248 2603.

## கனடாவின் நான்கு தொகுதிகளில் 19ம் திகதி இடைத்தேர்தல்

இந்த மாதம் 19ம் திகதி கனடாவின் நான்கு தொகுதிகளுக்கு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. கியுபெக்கில் நோட்டே - டாம் டிகிரேஸ் வெஸ்ட்மவுண்ட் தொகுதி, ஒன்ராறியோவில் ஒக்ஸ்போர்ட் தொகுதி, மனிற்றோபாவில் போர்டேஞ் - லிஸ்கார் தொகுதி மற்றும் வினிபெக் தென்மத்திய தொகுதி ஆகியவற்றில் இடைத்தேர்தல் இடம்பெறும். முதல் மூன்று தொகுதிகளிலும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள் அரசியலிலிருந்து ஓய்வு பெற்றதாலும், நான்காவது தொகுதி உறுப்பினர் மரணமானதாலும் இங்கே இடைத்தேர்தல் இடம்பெறுகிறது. நான்கு தொகுதிகளிலும் ஏற்கனவே வெற்றி பெற்ற கட்சிகளே மீள வெற்றி பெறும் சூழ்நிலை காணப்படுகிறது.

## புதிய தொலைபேசி எண் 942 அறிமுகமாகிறது

ஒன்ராறியோ மாகாண தொலைபேசி பாவனையாளர்களுக்கு மற்றுமொரு பிராந்திய தொடர்பு எண் அறிமுகமாகவுள்ளது. ஏற்கனவே 416, 437, 647 ஆகிய மூன்று இலக்கங்கள் பாவனையில் உள்ளன. குறிப்பிட்ட ஒவ்வொரு இலக்கத்துக்கும் ஒதுக்கப்பட்ட பாவனையாளர் எண்கள் அதனை நிறைவு செய்ததால் புதிய தொடர்பு இலக்கமாக 942 அறிமுகமாகவுள்ளது. ஐந்தாவது பிராந்திய தொடர்பு எண் அடுத்த நான்கு வருடங்களுக்குள் பாவனைக்கு வரக்கூடுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## மன்னர் சார்ள்ஸ் உருவம் பொறித்த கனடிய நாணயம்

கடந்த மாதம் முடி சூட்டப்பெற்ற பிரித்தானிய மன்னர் சார்ள்ஸின் உருவம் பொறித்த நாணயத்தையும் 20 டாலர் பணத்தாளையும் வெளியிட கனடிய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. காலஞ்சென்ற எலிசபெத் ராணியின் உருவம் பொறித்த 20 டாலர் பணத்தாளுக்குப் பதிலாக புதியது வெளிவரும். கனடிய தபால் கூட்டுத்தாபனம் ஏற்கனவே மன்னர் சார்ள்ஸ் உருவம் பொறித்த தபாற் தலையை வெளியிட்டுள்ளது.



பேராசிரியர் அமுது ஜோசெப் சந்திரகாந்தன்

# இந்த நூற்றாண்டுக்கான இருபத்தியொரு கற்பிதங்கள்


## ஊரும் உலகும் - 17

மறைந்த காலத்தை மனதில் நிறுத்தி, நிகழ்காலத்திற்கு முகம்கொடுத்து வருங்காலத்துக்கு வளமான திட்டங்களைத் தீட்ட வழிகாட்டும் வகையில் மூன்று நூல்களை எழுதி, பத்துவருடங்களுள் பல மில்லியன் வாசகர்களை தன்வசம் இழுத்துக் கொண்டவர் பேராசிரியர் யுவல் நோவா ஹராரி.

இளமைத் துடிப்புடன் தாய்நாட்டிற்காக தனது உயிரைத் தியாகம் செய்ய வேண்டும் என ஒரு காலத்தில் கனவு கண்ட இவர், இஸ்ரேலில் எளிமையான ஒரு பின்னணியில் வாழ்ந்தாலும், யூத மதத்துடன் தனது பொருந்தாத தன்மையை விரைவில் உணர்ந்து, தனது மதச்சார்பற்ற நாத்திகக் கருத்துகளை வெளிப்படையாகவே போதித்தும் வருபவர்.

பேராசிரியர் யுவல் நோவா ஹராரி தற்போது ஜெருசலேமின் ஹீப்ரு (எபிரேய) பல்கலைக்கழகத்தில் செல்வாக்குமிக்க வரலாற்றியல் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார். அவரைப் பொறுத்தவரை, மதங்கள் அறிவின் ஆதாரமாக இருப்பதற்குப் பதிலாக, கோத்திரங்களாகப் போரிடும் குழுக்களை ஒன்றிணைப்பதற்கும் ஒரு தேசத்தின் மத்தியில் அதிகாரத்தை உருவாக்குவதற்கும் மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட மார்க்கங்களே என தனது நூலில் வாதிடுகின்றரர்.

உயர்ந்த தரிசன வீச்சுடன் மனித வாழ்வின் முக்காலங்களையும் முறையே படம் பிடித்துக் காட்டுவதுபோல் வரையப்பட்டுள்ள அவரது நூல் உலகில் பலரது கவனத்தையும் ஈர்த்தது. அவரது மூன்று நூல்களுள் முதல்நூல் ஹோமோ சபியன்ஸ் (மதிநுட்ப மனிதன்). இந்நூல் மனிதகுலத்தின் சுருக்கமான வரலாறு பற்றியது. இரண்டாவது நூல் ஹோமோ டெயூஸ் (இறை மனிதன்). மூன்றாவது நூல் 21ஆம் நூற்றாண்டுக்கான இருபத்தியொரு கற்பிதங்கள். மூன்று நூல்களுமே மிகப் பிரசித்தி பெற்றவை.




'ஹோமோ சபியன்ஸ்' மற்றும் 'ஹோமோ டேயூஸ்' முறையே கடந்த காலத்தையும் எதிர்காலத்தையும் பற்றியவை. மூன்றாவது நூல் எமது சமகாலம் அல்லது நிகழ்காலம் பற்றிய பரந்த விரிந்த தரிசன நோக்குடையது.

விமர்சன நோக்குடன் மதச்சார்பற்ற தத்துவார்த்தப் போக்கில் தொழில்நுட்ப சவால்கள், அரசியல் சவால்கள், விரக்தியும் எதிர்கால நம்பிக்கையும், உண்மையுணர்தல் மற்றும் எதிர்விசைப்பு என ஐந்து பெரும் பகுதிகளாகப் பிரித்து, சிலவற்றை துணைப் பகுதிகளாவும் பகுத்து இருபத்தியொரு கற்பிதங்களை அத்தியா-யங்களாக வகுத்து எதிர்வுகூறும் முறையில் எழுதியுள்ளார். இந்த இருபத்தியொரு கற்பிதங்களுமே பல்வேறு சமய, சமூக, அறிவியல் விஞ்ஞானம், தொழில்நுட்பம் போன்ற நடைமுறை வாழ்வு சார்ந்த எண்ணக்கருக்கள் பலவற்றை உள்ளடக்கிய வாதப் பிரதிவாதங்களை வரையறை செய்பவை.

இன்று துரித கதியில் வளர்ச்சி பெற்றுவரும் டிஜிட்டல் தொழில்நுட்பம், விஞ்ஞான அறிவியல், மருத்துவம், சமய சமூக வரலாற்றியல் போன்ற பல நவீன தேடுதுறைகளின் உச்சிகளில் நின்று மானிடத்தின் எதிர்கால வளர்ச்சிகளை எடைபோட ஆசிரியர் முனைந்துள்ளார். அனைத்து அத்தியாயங்களும் வாசகர்களைக் கவரும் வண்ணம் வார்க்கப்பட்டுள்ளன. சுதந்திரம், சமத்துவம், சமூகம் பற்றிய மூன்று அத்தியாயங்கள் அதீத ஈடுபாட்டுடன் பின்னப்பட்டுள்ளன. இத்தகைய நூல் சர்ச்சைக்குரிய, சங்கடம்மிக்க வாதச் சமர்களையும், சவால்களையும் வரவழைக்கும் என்பதும் எதிர்பார்க்கக் கூடியதே.

அவரது எதிர்காலப் பார்வை கறுப்பு - வெள்ளை, இஸ்லாம்-கிறிஸ்தவம், அமெரிக்கா - ரஷ்யா, பேஸ்புக் - அணு ஏவுகணைகள், போரழிவு-மனிதநேயம், டிஜிட்டல் சர்வாதிகாரம், பொருண்மியம் பெண்ணியம், குடிவரவு-இனத்துவேசம் என இன்றைய பன்னாட்டுப் பிரச்சனைகள் அனைத்தையும் தொட்டுப் பரந்து விரிந்து செல்கிறது. “ரோபோக்களைக் கொல்வதன் மூலம் நமது சமூகங்களின் மீதான உயரடுக்குக் கட்டுப்பாட்டின் சிக்கலை நாம் முடிவுக்குக் கொண்டுவர முடியாது” எனக் கூறும் இவர் 21ம் நூற்றாண்டின் கல்விமுறை காலாவதியான பழமையின் எச்சம் என்றும் தேவையற்ற தகவல்களை அது அடிப்படையாகக் கொண்டதெனவும் விளக்குகிறார். படைப்பாற்றலும், தொடர்பாடலும், விமர்சன சிந்தனைப்போக்கும் பல்துறை சங்கமப் பாதைகளையும் பிள்ளைகளுக்கு கற்பிப்பதில் கவனம் செலுத்த வேண்டுகோள் விடுக்கின்றார்.

பாசிசம், கம்யூனிசம் மற்றும் தாராளவாதம் போன்றவையின் இறப்பு பற்றிக்கூறி விபரிக்கிறார். ஆயினும் இந்த சித்தாந்தங்களின் மரணம் பற்றிய அவரது விளக்கங்கள் பல புதிய கேள்விகளை எழுப்புகின்றன. தங்கள் வாழ்க்கையில் நிச்சயமற்ற தன்மையை முடிவுக்குக் கொண்டுவர மனிதர்களே கடவுளை உருவாக்கினர் என்றும், சமூக விலங்குகளாகிய மனிதர் மதிநுட்பத்துடன் அறிவியலைப் பயன்படுத்தி எல்லா பிரச்சனைகளையும் தீர்க்கும்போது சமயம் தேவையற்றதாகிவிடும் எனவும் கணித்துள்ளமையும் சர்ச்சைக்குரியது!.

தொழில்நுட்ப வளர்ச்சியின் வேகம் மனிதர்களின் பிரச்சனைகளை திறமையான கருவிகளைக் கொண்டு தீர்வு காணும்போது பல தொழிற் தளங்களில் மனிதர்களின் ஈடுபாடு காலாவதியாகிவிடும் எனவும், பயோடெக்னாலஜியால் மனித உயிர் சார்ந்த வேதியியலைப் புரிந்து கொள்ளத் துவங்கும்போது, தத்துவவாதிகளும் தாதிகளுமே அதிகமாகத் தேவைப்படுவார்கள் எனவும் கணித்துள்ளார்.

இந்த நூலிலுள்ள சில அனுமானங்களுடன் உடன்படுவது சிரமம். ஆயினும் இந்த நூற்றாண்டின் இறுதிவரை அடுத்தடுத்து வரும் சந்ததியினருக்கு இவரது சிந்தனையின் வழிவரும் பலநூறு எதிர்வுகள் பயனுள்ளவையாக அமையும் என்பது மட்டும் சீரிய உண்மை.



பிறேம் சிவகுரு - இங்கிலாந்து

# 'புறொக்ஸி' அரசியலால் புதிய மேலாண்மை

உக்ரைனை மையப்படுத்தி ரஷ்யாவுடன் மேற்குலம் ஆடும் போர் ஆட்டம் தற்போது 'பொறுத்தது போதும் பொங்கியெழு மனோகரா' பாணியில் உக்ரைனுக்கு எஃப்-16 போர்விமானங்கள் என்பதாக வந்துவிட்டது.

இப்போதைய நிலையில் உக்ரைனுக்கு எஃப்-16 போர் விமானங்களை தனியாக தானமாக வழங்க எந்தவொரு மேற்குலக நாடும் முன்வந்ததாக தெரியவில்லை.
செலவினம் மிகுந்த எஃப் - 16 கலங்களை தனியாக ஒரு நாடு தானம் வழங்குவது கடினம் என்பதால் ஒரு குழுவாக இவற்றைத் தானம் செய்யும் பொறிமுறை குறித்து மேற்குலக பங்காளிகள் அலசுகின்றார்கள். உக்ரைனோ வந்ததுவரை லாபம் என்ற அடிப்படையில் தனக்கு ஆகக்குறைத்தது 200 எஃப் - 16 கலங்களையாவது தேவையென ஆற்றிலை போற தண்ணி அம்மா குடி அப்பா குடி என்ற பாணியில் சொல்கிறது

எது எவ்வாறோ எஃப்-16 விமானங்களை செலுத்த உக்ரைனிய விமானிகளுக்கு பயிற்சிகளை வழங்க அமெரிக்கா தயாராகிவிட்டதான பேசுபொருள் வந்துவிட்டதால் விசயம் பரபரப்பாகிவிட்டது. எனினும் எஃப்-16 சூத்திரம் இந்த ஆடு புலி ஆட்டத்தில் உண்மையில் ஒரு 'கேம் சேஞ்சர்' ஆக - அதாவது போர் ஆட்டத்தை உக்ரைனுக்கு சார்பாக மாற்றுமா என்பதில் ஐயங்கள் உள்ளன.

கடந்த மே மாதத்தில் உக்ரைனிய தலைநகர் உட்பட்ட பல இடங்களில் ரஷ்யா கடுமையான ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியிருந்தது. இந்த தாக்குதலின் பின்னணியில் இரண்டு நாடுகளுமே தத்தமது எதிராளிகளின் இழப்புகள் குறித்த உரிமை கோரல்களைச் செய்தன.

## எல்லை கடந்த உலா

தனது தாக்குதலில் கியவ்வில் இருந்த அமெரிக்காவின் பேட்ரியாட் வான் பாதுகாப்பு அமைப்பு டமார் ஆகியதாக ரஷ்யா உரிமைகோர, அதற்கு மறுதலையாக ரஷ்யாவின் ஹைப்பர் சோனிக் எனப்படும் ஒலியைவிட 5 மடங்கு வேகத்தில் செல்லும் ஆறு கின்'ால் ரக ஏவுகணைகளை தாம் சுட்டுவீழ்த்தியதாக உக்ரைனும் உரிமை கோரியது.

இந்த இரண்டு உரிமை கோரல்களிலும் ஓரளவு உண்மை இருந்ததாகவே தெரிகிறது. ரஷ்ய ஏவுகணைகளை மேற்குலகின் வான்பாதுகாப்பு ஏவுகணைகள் இடைமறித்த அதே சமகாலத்தில், 1.1 பில்லியன் அமெரிக்க டாலர் பெறுமதிகொண்ட அமெரிக்கத் தயாரிப்பான பேட்ரியாட் ஏவுகணை தொகுதி மீதும் தாக்குதல் நடத்தப்பட்டதை அமெரிக்காவும் பின்னர் ஏற்றுக்கொண்டது.

உக்ரைனில் தற்போது இரண்டு பேட்ரியாட் ஏவுகணைத் தொகுதிகள் உள்ளதாகக் கூறப்படும் நிலையில் அதில் ஒன்று ரஷ்யாவினால் இலக்கு வைக்கப்பட்டுள்ளது

இதற்கிடையே பிரித்தானியா உக்ரைனுக்கு வழங்கிய புதிய ஏவுகணைகள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த இடம் ஒன்றும் ரஷ்யாவால் அழிக்கப்பட்டதான பரகசியப்படாத இரகசிய கிசுகிசுக்களும் உண்டு

இதேபோலவே, தாம் வழங்கிய Storm Shadow ஏவுகணைகளை உக்ரைன் வெற்றிகரமாக பயன்படுத்தியுள்ளதாக பிரித்தானியா பெருமை பாராட்டினாலும், உக்ரைனின் பக்முத் பிராந்தியம் ரஸ்யாவின் வோக்னர் கூலிப்படையிடம் விழுந்த செய்திகளே இறுதியில் யதார்த்தமாக வந்திருந்தன. இதனால்தான் பொறுத்தது போதும் இனி எஃப் - 16 அஸ்திரங்கள்தான் என்ற நிலை வந்துவிட்டது

அமெரிக்காவைப் பொறுத்தவரை டென்மார்க் நெதர்லாந்து போன்ற நாடுகளிடம் இருக்கும் எஃப்-16 போர் விமானங்கள் உக்ரைனுக்கு தாரை வார்க்கப்பட்டால், அந்த நாடுகள் அவற்றை பிரதியீடு செய்யும் வகையில் தன்னிடம் புதிய போர் விமானங்களைக் கொள்வனவு செய்யும் என்பதால் தானும் கொஞ்சம் காசு பார்க்கலாம் என்ற ஒரு கணக்கு அமெரிக்காவுக்கு இருக்கக்கூடும்.

தற்போது உக்ரைனிடம் உள்ள சோவியத் காலத்து போர் விமானங்களான ஆமை-29 மற்றும் ஸுர-27 ரக கலங்களுடன் ஒப்பிடும்போது எஃப்-16 கலங்கள் மேம்பட்டவை என்பதை மறுக்க முடியாது. இதனால்தான் எஃப் - 16 கலங்கள் உசத்தியானவை என மேற்குலகம் லாவணி பாடுகிறது

1970களில் இருந்து ஆயிரக்கணக்கான எஃப்-16 விமானங்கள் அமெரிக்காவால் தயாரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் நூற்றுக்கணக்கானவை உலகம் முழுவதும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. தற்போதைய நிலையில் உலகளாவிய ரீதியில் ஏறக்குறைய 2,200 எஃப் - 16 கலங்கள் செயற்பாட்டில் உள்ளன. இதன் அடிப்படையில் உலகளாவிய ரீதியில் பயன்படுத்தப்படும் போர் விமானங்களில் 15 வீத வகிபாகத்தை எடுத்துள்ள மிகவும் பிரபலமான போர் விமானம் என்பதையும் மறுப்பதற்கு இல்லை.

எனினும், எஃப் - 16 கலங்களை விட அதிக திறன் கொண்ட போர்விமானங்கள் மேற்குலகிடம் இருந்தாலும் அவை தொகையில் குறைவாக உள்ளதால், உலகில் அதிக தொகையில் இருக்கும் எஃப் - 16 கலங்களையே உக்ரைனுக்கு தானம் வழங்கும் தெரிவு உள்ளது.

ஆனால், உக்ரைனுக்கு எஃப்-16 கலங்கள் கிட்டினாலும் இந்தக் கலங்களில் பொருத்தக்கூடிய மேற்குலக ஏவுகணைகள் மற்றும் குண்டுகள் யாவுமே விலை உயர்ந்ததாக இருக்குமென்பதால் இவற்றை யார் வழங்கிக்கொள்வது என்பதும் இன்னொரு வினா.

அமெரிக்கா வேண்டுமானால் தனது ஆயுதக் களஞ்சிய கையிருப்பிலிருந்து இவற்றை வழங்க முடியும், ஆனால், இந்தப் போர் இழுபட்டால் தனது ஆயுத களஞ்சிய சரக்குகள் தீர்ந்துவிடும் என்பதையும் அது அறியாதது அல்ல.

இந்த நிலையில், உக்ரைனுக்கு எஃப் - 16 போர் விமானங்கள் வழங்கப்பட்டால், பெரிய ஆபத்து வரும் என வழமைபோலவே ரஷ்யா கொளுத்திப் போட்டுள்ளது. ரஷ்யாவைப் பொறுத்தவரை உக்ரைனில் தற்போது எஃப் - 16 போர் விமானங்களின் செயற்பாட்டுக்குரிய உட்கட்டுமானங்கள் மற்றும் வசதிகள் இல்லையென்பதால் இவற்றை நேட்டோ நாடுகள் தான் கையாளப்போகின்றன என்ற ஐயம் உள்ளது. இவ்வாறான ஒரு நிலைமை ஏற்பட்டால் அது நேட்டோவின் நேரடிப் போர் என்ற வகைக்குள் வரும் என அதன் எச்சரிக்கை உள்ளது.

ஆகமொத்தம் இந்த எஃப்-16 நவதானத்தின் பின்னணியில் பல குறைபாடுகள் சவால்கள் இருந்தாலும், உக்ரைனை மையப்படுத்தி ரஷ்யாவுடன் மேற்குலகம் நடத்தும் இந்த புறொக்ஸி அரசியல் போர்க்களத்தில் வெற்றிகள் தேவையென்பதால் இந்த எஃப் - 16 சூத்திரம் மேற்குலகத்தின் அரசியல் மற்றும் இராஜதந்திர மேலாண்மையை நிருபிக்கும் ஒரு அடையாளமான பேசுபொருளாகவே தொடரும்.

# Many young Canadian professionals at a Mental health 'breaking point'

Tara De Boer

A recent report published by the Boston Consulting Group (BCG) has found that five million young professionals in Canada are in need of mental health support, advising businesses and organizations to invest more into employee wellbeing.

"There's still a lot of stigma in discussing mental health. Young people especially, are feeling discouraged from presenting the issues that they're facing right now," Genevieve Bonin, co-author of the report and managing director and partner at BCG told CTVNews.ca. "Organizations do care greatly about the health and well being of their employees, and I think this is now a very open topic for many organizations. But organizations are very slow to recognize the extent of the crisis, so they don't necessarily have an overarching strategy."

More than 1,300 young Canadian professionals were interviewed for the study in late 2022 to learn the effects of their workplaces on their mental wellbeing.

The conclusion? Work is the number one source of stress for Canadians.

**MENTAL HEALTH IN THE WORKPLACE**

The study found 25 per cent of all Canadians reported having symptoms of a mental health disorder in 2021, while 50 per cent said they need mental health support, and 35 per cent report being burnt out.

As for the future of the workforce and the livelihood of 18 to 24 year olds, 40 per cent of the demographic is reportedly at a "breaking point" for their mental health.

For Brenda Zhou, co-founder at Feelin' Good Collective, a corporate mindfulness and wellness company dedicated to promoting employee well-being, the rise in mental health challenges for young professionals is due primarily to a lack of emotional support from employers, particularly in the remote or hybrid working model, she told CTVNews.ca in an email.

"This makes it even more difficult to establish non-judgemental work environments—causing young professionals to face challenges in expressing their authentic selves, promoting healthy communication, and building relationships with their colleagues," says Zhou. "This is becoming more evident with young people who are entering the workforce for the very first time post-pandemic."

What's more, according to the study findings, those who reported mental health struggles will experience some form of mental illness by age 40.

"On average, we spend a third of our lives at work, and we find that companies/organizations who encourage strong core values are able to build a workplace culture where young professionals can find meaning in their roles," says Zhou, who also sees a gap between the alignment of core values in young professionals and leadership teams who come from older generations.

She adds that employees should be seen as unique individuals beyond their job titles, and in order to bridge the gap, there should be leadership training on how to best support employees, as well as more opportunities to encourage growth in individual and professional well-being in the workplace.

**IMPACTS OF MENTAL HEALTH ON CANADIAN ECONOMY**

The study authors write that well-being is highly correlated with productivity, meaning employees who are well taken care of typically produce higher quality work.

From an economic perspective, it is crucial that Canadian businesses invest in the mental health of their employees in order to support the health of the economy and continue to grow businesses, according to the study.

In fact, the study found unchecked stress in the workplace is costing Canada more than $220B annually, contributing to a national mental health crisis.

Statistics Canada reported in 2022 that the unemployment rate was steady at a historical low of 4.9 per cent. As more positions open up, it's becoming important to attract young talent to fill them.

However, younger employees are demanding more than just a good paycheque these days. The report cites that compared with Baby Boomers, two times as many Millennials and Gen Z workers want a job culture that is invested in their mental health and well-being.



எஸ். ராஜ்மோகன்

# பணிலமாடம் - 70

## இயற்கைவள நன்நாடு

கனடாவின் சனத்தொகைக்கும், இலங்கையின் சனத்தொகைக்கும் இடையே அண்ணளவாக பதினெட்டு மில்லியன் வித்தியாசம்தான் உள்ளது என்றால் பலர் நம்பமாட்டார்கள். கனடாவின் சனத்தொகை கிட்டத்தட்ட முப்பத் - தொன்பது மில்லியன் ஆகும். இலங்கையின் சனத்தொகை 22 மில்லியனாக உள்ளது. இலங்கையிலும் பார்க்க 151 மடங்கு பெரிதான கனடாவின் சனத்தொகை பரப்பளவுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் மிகவும் குறைவான விகிதத்திலேயே காணப்படுகின்றது. இதுபோன்ற கனடாவைப் பற்றிய பல விடயங்கள் எங்களை ஆச்சரியப்படுத்துகின்றன.

* கனடா, முழு ஐரோப்பிய ஒன்றியத்தையும் விடப் பெரியது > இத்தாலியை விட முப்பத்திமூன்று மடங்கு பெரியது > பிரான்ஸை விட பதினைந்து மடங்கு பெரியது. மெக்ஸிக்கோவை விட ஐந்து மடங்கு பெரியது. இந்தியாவைப் பார்க்கிலும் மூன்று மடங்கு பெரியது. உலகின் பெரும் நிலப்பரப்புகளைக் கொண்டுள்ள நாடுகளில் ரஷ்யாவுக்கு அடுத்ததாக கனடா உள்ளது.

* அண்மையில் வெளியிடப்பட்ட தகவல்களின் படி, கனடாவில் பதிவான ஆகக் குறைவான வெப்பநிலை செவ்வாய்க் கிரகத்தின் மேற்பரப்பில் காணப்படும் வெப்பநிலையை ஒத்ததாக இருந்துள்ளது. 1947ம் ஆண்டு யூக்கோனில் உள்ள ஸ்னாக் என்ற சிறிய கிராமத்தில் காற்றின் குளிர்நிலை இல்லாமல் - 63 செல்ஸியஸ் வெப்பநிலையாகப் பதிவாகியிருந்தது.

* உலகில் உள்ள வேறு எந்த நாட்டையும் விட, அதிக ஏரிகளால் சூழப்பட்ட நிலப்பரப்புகளைக் கொண்ட நாடு கனடா, லேக் சுப்பீரியர், லேக் ஒன்ராறியோ, கிரேட் பியர் லேக், லேக் ஹூரோன், லேக் ஈரி மற்றும் வின்னிபெக் ஏரி ஆகியவை கனடாவில் உள்ள முக்கிய நன்னீர் ஏரிகளாகும். கனடா, உலகிலேயே அதிக எண்ணிக்கையிலான ஏரிகள் உள்ள நாடு என்ற பெருமையுடன் 879,800 ஏரிகளைக் கொண்டுள்ளது.

* உணவின்றி, ஓய்வுமின்றி, சிறு தூக்கம் கூட இல்லாமல் கனடாவின் கடற்கரை வழியே தொடர்ந்து நடக்க முனைந்தால், எமக்கு கிட்டத்தட்ட நான்கரை ஆண்டுகள் தேவைப்படும். மூன்று பக்கங்களில் அட்லாண்டிக், ஆர்க்டிக் மற்றும் பசிபிக் சமுத்திரங்களால் சூழப்பட்ட கனடாவின் கடற்கரையானது உலகின் மிக நீளமான கடற்கரையாகும். இது 243,042 கிலோமீற்றர் அளவுள்ளது. அதற்கடுத்த பெரிய கடற்கரையாக 54,716 கிலோமீற்றருடன் இந்தோனேசியாவும், அதற்கடுத்ததாக ரஷ்யா 37,653 கிலோமீற்ற - ருடனும், அமெரிக்கா 19,924 கிலோமீற்றருடன், சீனா 14,500 கிலோமீற்றருடனும் காணப்படுகின்றன.

* உலகில் உள்ள காடுகளின் அளவில் பத்து சதவீதத்தைக் கனடா கொண்டுள்ளது.. அதேவேளை குளிர் பிரதேசங்களில் வளரும் ஊசியிலைக் காடுகளின் அளவில் உலகில் முப்பது சதவீமான அளவைக் கொண்டுள்ளது. 397 ஹெக்ரேர் காடுகள் மற்றும் மரங்கள் நிறைந்த பகுதிகள் கனடாவில் உள்ளன. இதில் அறுபத்தெட்டு சதவீதமானவை ஊசியிலைக் காடுகளாகக் காணப்படுகின்றன.

* கனடாவில் உள்ள தேசிய பூங்காக்களின் அளவு, அனேகமான நாடுகளை விட அதிகளவில் உள்ளது. முப்பத்தியேழு தேசிய பூங்காக்களும், பத்து தேசிய பூங்காவுக்காக ஒதுக்கப்பட்ட பகுதிகளும் கனடாவில் இருப்பது கனடியர்களின் இயற்கை மீதான ரசனையை வெளிப்படுத்துகிறது. வூட் பஃலோ தேசிய பூங்கா, கனடாவின் மிகப் பெரிய தேசிய பூங்காவாகும். இது 44,741 சதுர கிலோமீற்றர் அளவுடையது. டென்மார்க் மற்றும் சுவிட்சர்லாந்தை விட பெரிதான இந்தப் பூங்கா உலகின் இரண்டாவது பெரிய பூங்காவாகும். கனடாவின் வடமேற்குப் பிரதேசங்களில் உள்ள நஹன்னி தேசிய பூங்காவுக்காக ஒதுக்கப்பட்ட இடங்கள் பெரிய நீர் விழ்ச்சிகளைக் கொண்டவை. இதன் அளவு 30,050 சதுர கிலோமீற்றராகும்.

* கனடாவின் கியூபெக் நகரத்திற்கு ஒரு சிறப்பு உள்ளது. இந்த நகரத்தைச் சுற்றி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அரண்கள் காணப்படுகின்றன. மெக்ஸிக்கோவிற்கு அடுத்ததாக அரண்களால் சூழப்பெற்ற ஒரு நகரமாக கியூபெக் நகரம் இன்றும் காணப்படு - கின்றது. பிரென்ஸ்சுக்காரர்களும் பின்னர் ஆங்கிலேயர்களும் இந்த கியூபெக் நகர அரண்களை பதினேழாம் மற்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் கட்டினார்கள். இன்றும் நான்கு கோட்டை வாயில்கள், மூன்று கோபுரங்கள், பீரங்கிகள் பொருத்தப்பட்ட 4.6 கிலோமீற்றர் அரண்களும் இங்கு காணப்படுகின்றன. உலகில் உள்ள பாரம்பரிய தளங்களில் ஒன்றாக கியூபெக் நகரமும் காணப்படுவது கனடாவுக்கு பெருமை சேர்க்கின்றது.

* கனடாவில் ரஷ்யாவை விட ஆறு மடங்குக்கும் மேலான எண்ணெய் வளங்கள் நிலத்தடியில் உள்ளன. மிகவும் திண்மையும், ஒட்டும் தன்மையும் உள்ள 176.8 மில்லியன் பரல்கள் எடுக்கக் கூடிய வளங்கள் உள்ளன. இன்றைய கணிப்பின் படி இறக்குமதி ஏதுமின்றி 188 வருடங்களுக்கு இந்த எண்ணெய் வளங்கள் போதுமானவையாக இருக்கும்.

இது போன்ற நூற்றுக்கணக்கான சிறப்புகள் கனடாவுக்கு உள்ளன. கனடியர்களை எப்படி இனம் காணலாம் என்ற கேள்விக்கு, 'யார் அதிகமாக பியரை அருந்துகின்றார்களோ அவர்கள் கனடியர்கள்' என்ற நகைச்சுவையான பதிலை விடுத்து மண்ணையும், மனிதர்களையும் நேசிப்பவர்கள் தான் கனடியர்கள் என்று இறுமாப்பாகக் கூறலாம்.



கனகேஸ்வரி நடராஜா

# நித்திரை

இன்றைய காலத்தில் வாழ்பவர்கள் பலருக்கும் நித்திரை ஒரு பிரச்சனையான விடயமாகி விட்டது. முன்னர் பசி, தாகம் போல நித்திரையும் மனித வாழ்வில் சாதாரண விடயமாகக் கொள்ளப்பட்டது. நன்றாக நித்திரை கொண்டீர்களா என ஒருவரையொருவர் முன்னர் விசாரிப்பது கிடையாது. ஆனால், இன்று பலருக்கும் வயது வித்தியாசமின்றி ஒரு பிரச்சனையாக உருவாகி விட்டதால் ஒவ்வொருவரும் நலன் விசாரிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

கடினமான உழைப்புக் காரணமாக முன்னர் பெரியவர்கள் படுத்தவுடனேயே நித்திராதேவியின் அரவணைப்பில் சென்று விடுவார்கள். பிள்ளைகளும் இளையோரும் ஓடியாடி விளையாடிவிட்டு படுக்கைக்குச் செல்வதால் நித்திரை அவர்களை உடனடியாக ஆட்கொண்டு விடும். இன்று கடின உடலுழைப்போ ஓடியாடி விளையாடுவதோ, ஒரு இடத்துக்கு நடந்து செல்வதோ, உடலை வருத்தி வீட்டு வேலை செய்வதோ குதிரைக் கொம்பு நிலை. சகல வயதினரதும் கைகளில் ஏதோ ஒரு தொழில்நுட்பக் கருவி காணப்படுகிறது. இரவு முழுவதும் அதனுடனேயே இருக்கிறார்கள். பின்னர் அவர்களுக்கு நித்திரை சுலபமாக வருவதில்லை.

தொழில்நுட்ப முன்னேற்றம் காரணமாக நித்திரையின்றி வேலை செய்யும் சமூக கட்டமைப்பு இன்று உருவாகியுள்ளது. இதனால் நித்திரை பற்றாக்குறை ஒரு நோயாக மாறி அதற்கு பலவிதமான வைத்தியங்களும், ஆலோசனைகளும், ஊக்கமளிக்கும் யூரியூப் பிரசங்கங்களும் தேவைப்படுகிறது.

நித்திரை என்று சொன்னவுடன் பலரதும் நினைவுக்கு வருவது கும்பகர்ணனே. இவன் இராவணனின் இளைய சகோதரன். மிக நல்லவன். பிரம்மாவிடம் நித்தியத்துவம் வரம் பெற்று தவம் இருந்தான். பிரம்மா அவன் முன் தோன்றியதும் வாய் தடுமாறி நித்திரைத்துவம் வரம் வேண்டும் எனக் கேட்கிறான். வேண்டியதை ஈயும் இறைவன் அவன் கேட்ட வரத்தை கொடுத்தருள்கிறார். அதன் பலனாக கும்பகர்ணன் ஆறு மாதங்கள் தொடர்ச்சியாக நித்திரை கொள்வான். பின்னர் ஆறு மாதங்கள் விழித்திருப்பான். இதனாலேயே இரவும் பகலும் நித்திரை கொள்ளும் சோம்பேறிகளை இவன் ஒரு கும்பகர்ணன் என்று அழைப்பார்கள்.

சித்தி என்ற படம் அந்தக் காலத்தில் பிரபலமானது. அதில் எம்.ஆர். ராதாவுக்கு பத்மினி இரண்டாம் தாரமாக வாழ்க்கைப்படுகிறாள். முதல் தாரத்தின் குழந்தையை தாலாட்டும்போது அவர் பாடும் பாடல் யதார்த்தமானது. “காலமிது காலமிது கண்ணுறங்கு மகளே, காலமிதைத் தவறவிட்டால் தூக்கமில்லை மகளே” என்று ஆரம்பித்து, “பெண்ணாகப் பிறந்துவிட்டால் அவளுக்கு பிறப்பில் ஒது தூக்கமும் இறப்பில் ஒரு தூக்கமும் தான் உண்டு என இப்பாடல் சொல்கிறது. அக்காலத்தில் பெண்கள் பலவிதமான குடும்பச் சுமைகளை தாங்கியதால் எல்லாப் பருவத்திலும் அவர்களுக்குத் தூக்கம் குறைவே. இன்றும் பெண்களைப் பொறுததமட்டில் அதுவே நிலைமை. பொருளாதார சூழல் காரணமாக வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு இது நன்றாகப் பொருந்தும்.

ரொறன்ரோ ஒருபோதும் நித்திரை கொள்வதில்லை (Toronto never sleeps) என்று கூறுவார்கள். இங்கு 24 மணித்தியாலமும் தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. பலவிதமான பணிகள் இரவும் பகலுமென நடைபெறுகின்றன. புகையிரதங்கள், பேருந்துகள் மற்றும் வாகனங்கள் ஓடியபடியே இருக்கின்றன. ஏதோ ஒரு காரணத்துக்காக இரவும் பகலும் ஜனநடமாட்டம் தெருக்களில் காணப்படுகிறது. வார இறுதி நாட்களில் பல்வேறு கேளிக்கை நிகழ்ச்சிகள் வருடம் முழுவதும் இடம்பெறுவதால் மக்கள் இரவை பகலாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதனால் ரொறன்ரோ 24 மணிநேரமும் விழித்துக் கொண்டிருக்கிறது.

எமது முதலாம் தலைமுறையினர் இங்கு வருகை தந்த காலத்தில் அவர்களுக்கு இலகுவாகக் கிடைத்த வேலை பாதுகாப்பு ஊழியர் (Security Officer). தாயகத்தில் பெரும் பதவிகளில் இருந்தவர்கள் ஒரு ஆபத்துக்குக் கூட நித்திரை விழித்திருக்காதவர்கள். இங்கு வேறு வேலைக்கு செல்லக்கூடிய அனுபவம் இல்லாத காரணத்தால் விருப்பமில்லாமலே இரவு நேரத்தில் நித்திரை விழித்த பல சோகக்கதைகளை நாம் அறிவோம். அடிப்படைச் சம்பளத்துக்கும் வார நாட்களில் வேலை செய்த பலர் - சில பெண்கள்கூட வார இறுதி நாட்களில் இரவில் நித்திரை விழித்து வேலை செய்தனர்.


ஒருவர் ஆழ்ந்த நித்திரையில் இருக்கும்போது அவரை எழுப்புவது பாவமான செயல். இதனை மேற்குலக சமூகம் நன்றாக அறிந்திருக்கிறது. நித்திரைக்கு மதிப்புக் கொடுப்பார்கள். விமானப் பயணங்களில் உணவுகளைப் பரிமாறுபவர்கள் எந்தச் சத்தமும் இல்லாமல் உணவை வைத்துவிட்டுப் போய்விடுவார்கள். எங்கள் தாய்நாட்டில் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த கைதிகளை இராணுவம் கொடூரமான முறையில் நித்திரையால் எழுப்பி வதை செய்த கதைகள் பல உண்டு.

எமது தாய்மார் சிறு குழந்தைகளுக்கு கதைகள் சொல்லி நித்திரையாக்குவர். அவ்வாறு தோன்றியவைதான் படுக்கை நேர கதைகள் (Bed time stories). கதை கூறி முடியும் முன்னரே குழந்தைகள் நித்திரையாகி விடுவார்கள். இன்று முதியவர்கள் மனதுக்கு இதமான தேவாரங்கள், பஜனைகள் போன்றவற்றைக் கேட்டு மனதை அமைதிப்படுத்தி நித்திரையை வரவழைக்கிறார்கள்.

நேரமாற்றம் என்பது எமக்குப் பழக்கப்பட்டது. எமது உடம்பு குறிப்பிட்ட நேரத்துக்கு நித்திரைக்குப் போய் குறிப்பிட்ட நேரத்துக்கு விழித்து பழகி விடுகிறது. இந்த உடல் கடிகாரத்தில் வருடம் இருமுறை மாற்றம் ஏற்படுவதைக்கூட எம்மால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. நேரமாற்றத்தை அண்டிய காலப்பகுதியில் அதிக வாகன விபத்துகள் ஏற்படுகின்றன.

தொழில்நுட்பம் காரணமாக உலகம் மிகச் சுருங்கி விட்டது. இங்கிருந்தவாறு இந்தியா போன்ற நாடுகளில் மலிவான தொழிலாளர்களைக் கொண்டு பலரும் தொழில் நடத்துகிறார்கள். இதனால் உலகின் பல பகுதிகளில் இரவு பகலாக மாறிக்கொண்டு வருகிறது.

ஆறு - எட்டு மணித்தியாலங்கள் ஒருவருக்கு கட்டாயமாக நித்திரை தேவையென உடற்கூற்று வல்லுனர்கள் கூறுகிறார்கள். ஆனால் இன்று சகல வயதினரும் இரவிரவாக கண்விழித்து தமது கணினிகளிலும், ஸ்மார்ட் தொலைபேசிகளிலும் ஏதோ செய்தபடி இருக்கிறார்கள். இதனால் இன்றைய சமூகம் நித்திரை பற்றாக்குறையுள்ள ஒன்றாக (Sleep deprived) மாறி வருகிறது. இந்தப் பரிதாப நிலைக்கு மாற்றம் ஏற்படும்போலத் தெரியவில்லை.



இரா. சம்பந்தன்

# அகநானூறும் அவர்களின் வாழ்க்கையும்!

அந்த வீட்டின் உள்ளே ஒரு அகல் விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது. இரவு

நெடுநேரமாகியும் அவனை இன்னும் காணவில்லை. வயலிலே இரவு வரைக்கும் வேலை இருக்குமா அவள் எண்ணிக் கொண்டிருக்கும் போதே அவன் வந்துவிட்டான்.

ஏன் இவ்வளவு நேரம் என்றாள் அவள். வயலிலே நிறைய வேலை இருந்தது என்றான் அவன். சரி போய் குளிச்சிட்டு வா சாப்பாடு போடுறேன். அவன் திரும்பினான். உண்மையாகவே நீ வயலிலே இருந்துதான் வருகிறாயா வேறு எங்காவது போய் வருகின்றாயா என்று திரும்பவும் கேட்டாள் அவள்.

ஏன் எங்காவது தேவடியாள் வீட்டுப் பக்கம் போய் மேயந்துவிட்டு வருகிறேன் என்று நினைக்கிறாயா. எப்ப பார்த்தாலும் சந்தேகமான கேள்விகள். போய் சாப்பாட்டைப் போடு வருகிறேன் என்று சீறி விட்டு அவன் நடக்க அவள் உள்ளே திரும்பினாள்.

இன்று வயலிலே வேலை அதிகம். மிகவும் களைத்து விட்டேன். பசி வேறு. அதனால்தான் கோபம் வந்து கதைத்துவிட்டேன். எதையும் மனத்திலே வைத்திருக்காதே என்றான் அவன் உணவு பரிமாறிக் கொண்டிருந்தவளைப் பார்த்து.

குற்றமுள்ள மனதிலேதான் கோபம் அதிகமாக விளையும் என்று சொல்லுவார்கள். உனக்கு வருகின்ற கோபத்தைப் பார்த்தால் நீ வயல் வேலை மட்டும் செய்வதாகத் தெரியவில்லை. எனக்கு உண்மையாக நட. நேரத்துக்கு வீடு வந்து சேர். உனக்கும் எனக்கும் ஒரு மகன் இருக்கிறான் என்பதை மறந்து போகாதே.

இதோ பார். நீ நினைப்பது போல எதுவும் இல்லை. வயலும் வீடும் என்றுதான் எனது வாழ்க்கை போய்க்கொண்டிருக்கின்றது. வேண்டுமென்றால் கூட வேலை செய்பவர்களை அழைத்து வந்து உன்னுடன் பேச வைக்கட்டுமா.

வேண்டாம். பரவாயில்லை நீ சாப்பிடு என்றவள் உனக்கு இன்றைக்கு நடந்த ஒரு கதை சொல்கிறேன் - அதையும் கேட்டுக் கொண்டு சாப்பிடு என்றாள்.

நீர் நாய்கள் படுத்திருக்கும் குளத்திலே தாமரைப் பூவின் வெளி இதழ் போல இருக்கும் உள்ளங் கையும் சிவந்த வாயும் அதிலே கற்றறிந்து பேசாமல் யாவரும் விரும்பும் வண்ணம் இயல்பாக பிறக்கின்ற மழலைச் சொல் பேசும் எங்கள் மகன் தெருவிலே தனியாக தேர் உருட்டி விளையாடிக் கொண்டிருந்தான்.

நீ எனக்குத் தெரியாமல் தொடுத்து வைத்திருக்கின்றாயே அந்தக் கூரிய பற்களை உடைய இளம் பெண் அந்த வழியால் வந்தாள். எங்கள் பிள்ளையின் முகத்திலே உனது சாயல் இருப்பதைக் கண்டு ஓடி வந்து என் உயிரே என்று தன் மார்போடு அணைத்துத் தூக்கினாள்.

அந்த நேரம் பார்த்து நானும் வெளியே வந்தேன். அவள் பயத்தோடு என்னைப் பார்த்தாள். நான் கோபப்படவில்லை. பெண்ணே நீ ஏன் பயப்படுகின்றாய் இந்தக் குழந்தைக்கு ஒரு வகையில் நீயும் தாய்தானே என்று சொன்னேன்.

எனக்கு எல்லாமே தெரியும் என்பதை உணர்ந்து, அவள் களவெடுத்துப் பிடிபட்டவர்கள் தங்கள் களவை ஒப்புக்கொண்டு நிற்பது போல தலை கவிழ்ந்து நிலத்திலே தன் காலினாலே படம் கீறிக் கொண்டு நின்றாள்.

அவளின் பரிதாப நிலை கண்டு நானும் அவளருகே சென்று அவளை அணைத்துக் கொண்டேன். நாங்கள் சில வார்த்தைகளும் பேசிக் கொண்டோம்.

சின்னப் பெண். வானத்து அருந்ததி போல கற்போடு உன்னுடன் மட்டுமே இருக்கிறாள் என்று கேள்வி. அப்படிப்பட்டவள் இந்தப் பிள்ளைக்கும் அம்மாவாக இருந்ததுவிட்டுப் போகட்டுமே. நீ எனக்கு வாங்கித் தந்திருக்கும் புகழிலே இனி என்ன குறைந்துவிடப் போகிறது - சரி நீ சாப்பிடு என்றாள் அவள்.

நாயுடை முதுநீர்க் கலித்த தாமரைத்
தாதின் அல்லி அவிர் இதழ் புரையும்
மாசு இல் அங்கை மணி மருள் அவ்வாய்
நாவொடு நவிலா நகை படு தீஞ்சொல்
யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வனைத்
தேர் வழங்கு தெருவில் தமியோன் கண்டே
கூர் எயிற்று அரிவை குறுகினள் யாவரும்
காணுநர் இன்மையின் செத்தனள் பேணிப்
பொலங்கலம் சுமந்த பூண் தாங்கு இள முலை
வருக மாள என் உயிர் எனப் பெரிது உவந்து
கொண்டனள் நின்றோள் கண்டு நிலைச் செல்லேன்
மாசு இல் குறுமகள் எவன் பேதுற்றனை
நீயும் தாயை இவற்கு என யான் தற்
கரைய வந்து விரைவனென் கவைஇ
களவு உடம்படுநரின் கவிழ்ந்து நிலம் கிளையா
நாணி நின்றோள் நிலை கண்டு யானும்
பேணினென் அல்லெனோ மகிழ்ந வானத்து
அணங்கு அருங்கடவுள் அன்னோள் நின்
மகன் தாய் ஆதல் புரைவது ஆங்கு எனவே.

இந்தப் பாடல் சங்க இலக்கியமான அகநானூற்றிலே பதினாறாவது பாடலாக காணப்படுகின்றது. சாகலாசனார் என்ற புலவர் பாடியிருக்கின்றார். தண்ணீரில் வளர்ந்த கொடிகள் மண் நிலத்தில் இருப்பது போல கண்ணீரில் வளர்ந்த கொடிகள் பெண் குலத்தில் அன்றும் இருந்தன என்பதற்கு இந்தப்பாடல் ஒன்று மட்டுமே போதுமான சாட்சியாகும்.



பொன்னையா விவேகானந்தன்

# மரபும் மாண்பும் 37

## அகஞ்சார் பண்பு நிலைகள்

தமிழர் பண்பாட்டுக் கூறுகளை அகம்சார் பண்பாட்டுக் கூறுகள் புறஞ்சார் பண்பாட்டுக் கூறுகள் என இருவகையாகக் கருதலாம் என தொடக்கத்திலேயே குறிப்பிட்டிருந்தோம். இதுகாறும் அலைவுப்புல வாழ்வியலின் புறஞ்சார் நடத்தைகளில் கட்புலனாகவல்ல பண்பாட்டுக் கூறுகள் சிலவற்றைக் குறிப்பிட்டிருந்தோம். அன்றாட நடத்தைகளில் இணைந்திருக்கக்கூடிய இக்கூறுகள், இனத்தின் தனிச் சிறப்புமிக்க இயல்புகளைப் பிறருக்குப் புலப்படுத்தக் கூடிய - வையாகும். புறத்தே புலப்படுகின்ற பண்பாட்டுக் காண்பியங்களின் தோற்றம் அகத்திலிருந்தே நிகழ்கின்றன. குறித்தவொரு மாந்தவினம் காலங்காலமாகக் கொண்டிருக்கும் பண்பாடு தொடர்பான ஆழமான அகப்பதிவுகளே புறத்தே நிகழும் இயக்கங்களுக்குக் காரணமாகின்றன. அவ்வியக்கங்களே குறித்த மாந்தவினத்தின் பண்பாட்டுச் சிறப்புகளின் எல்லைகளை வரையறுக்கின்றன.

அடுத்துவரும் தொடர்களின் வாயிலாக, தமிழரின் அகச்சிந்தனைத்தளத்தில் காலமாற் - றங்களால் கரையாது பேணப்பட்டுவரும் அகஞ்சார் பண்பாட்டுக் கூறுகள் விரிந்துரைக் - கப்படவுள்ளன. பல்வேறு துணைத்தலைப்புகளின் வாயிலாக அவற்றை நோக்குவோம்.

### பரந்து உறவாடல்

தமிழரின் தன்னியல்புச் சிறப்புகளுள் உலக இனத்தாரோடு, பரந்து இணைந்து உறவாடி வாழும் மனப்பாங்கே உயர்ந்தது எனலாம். அன்றே யாதும் ஊரே யாவரும் கேளிர்”எனக் கணியன் பூங்குன்றன் கூற்றும்“வந்தாரை வாழவைக்கும் தமிழகம்”எனக் கடந்த நூற்றாண்டில் தோன்றிய சொற்றொடரும் உலகத்தாரோடு ஒட்டி உறவாடும் உயர்ந்த பண்பைக் குறிப்பிடுகின்றன.

தமிழர்கள் வரலாற்றுக்காலம் தொட்டே கீழ்த்திசை, மேற்றிசை நாடுகளுடனும் இந்தியாவின் வடபாகத்துடனும் கொண்டிருந்த நெருக்கமான வணிகத் தொடர்புகள் ஓரினத்தை மற்றைய இனம் புரிந்து கொள்ளும் வாய்ப்பு - களை ஏற்படுத்தியது என்கின்றார் தனிநாயகம் அடிகளார்.

“கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் உரோம நாட்டில் தோன்றிய‘ஸ்டோயிசம்’என்ற சித்தாந்தம் உரோமர்களுக்கு உலக மனப்பான்மையைத் தோற்றுவித்ததைப் போலவே சங்க காலத்துக்கு முற்பட்ட காலத்திலிருந்தே தமிழரிடையேயும் அந்த மனப்பான்மை பரவியிருந்தது”என்கிறார் அடிகளார்.

கணியன் பூங்குன்றனைத் தொடர்ந்து, வள்ளுவரும்

“யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாத்துணையுங் கல்லாத வாறு’என்கின்றார்.

கற்றோருக்கு எல்லா நாடும் அவர் நாடே - எல்லா ஊரும் அவர் ஊரே என்பது இதன் பொருள்.

தமிழர்களின் பண்பட்ட வாழ்வானது, நாடு, இனம், மொழி, மதம் என்ற எல்லைகளைக் கடந்து மானுடத்தோடு பேரன்புப் பிணைப்பை ஏற்படுத்தும் விரிந்து பரந்த உளப்பாங்கை தோற்றுவித்திருந்தது. இந்தப் பண்பாட்டின் உச்ச வெளிப்பாடே திருக்குறள் என்ற இலக்கியம். தமிழில் எழுதப்பட்ட திருக்குறள், மானுடம் தமக்குள் வகுத்துக்கொண்ட மேற்குறித்த எந்தவொரு எல்லைக்குள் - ளும் அடங்கி நில்லாது, மானுடப் பொதுமையைப் பேசிய உலகளாவிய முதல் நூல். தமிழரின் உலக மனப்பான்மையின் தொன்மைக்கு இந்த நூலே பெருஞ்சான்று.

‘காவிரிப்பூம்பட்டினம், மதுரை போன்ற தலைநகரங்களில் யவனர்களும் கிரேக்கர்களும் குடும்பங்களோடு வந்து தங்கி வாழ்ந்தனர்’என்ற செய்தியை பெரிப்பிளஸ் (Periplus) என்ற சிரேக்கர்களின் பயணநூல் குறிப்பிடுகின்றது. அவ்வாறு வாழ்ந்தோர் தமது தாய்மொழியையே பேசிவந்தமையால் இப்பட்டினங்கள் பலமொழி வழங்கும் ஊர்களாயின. இதைப் பட்டினப்பாலை,

‘மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்

முட்டாச் சிறப்பிற் பட்டினம்’எனக் குறிப்பிடுகின்றது. புலம்பெயர் என்ற சொல்லை முதன்முதலாகக் கையாண்ட இலக்கியமும் இதுவே.

‘யவனர்கள் சிறப்பாகக் குதிரைகளையும், சாராயத்தையும் இங்கு இறக்குமதி செய்துவிட்டு, அவற்றிற்குப் பதிலாக அணிகலன்களையும் முத்துகளையும் ஏற்றுமதி செய்து சென்றார்கள்’ என மதுரைக்காஞ்சி என்ற இலக்கியம் கூறுகின்றது.

‘நனந்தலைத் தேஎத்து நன்கலன் உய்ம்மார்
புணர்ந்துடன் கொணர்ந்த புரவியொ டனைத்தும்
வைகல் தோறும் வழிவழிச் சிறப்ப’

தமிழ் இலக்கியங்களைப் போன்றே, மேற்றிசை நூல்களிலும் தமிழர்களின் வணிகம் பற்றிய பல குறிப்புகள் காணப்படுகின்றன. இஸ்தான்புல்லா என்ற துருக்கிய நகரத்துத் தொல்பொருள் காட்சியகத்தில் தமிழ் வணிகர்களின் தொன்மையான பொருள்கள் பல காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

இறைநெறிகளை முதன்மைப்படுத்தி நாடுகளும் இனங்களும் வரலாற்றுக்காலந்தொட்டே முரண்பட்டும் மோதியும் வருகின்றன. தமிழர்கள் மதத்தை முன்னிறுத்தி ஒருபோதும் மோதியதில்லை. தமிழர்களுக்கு மதம் நெறியாகவே இருந்ததனவன்றி வெறியாக இருந்ததில்லை.

தமிழகத்தை நோக்கி, சமணம், பௌத்தம், வைணவம், இஸ்லாம், கிறிஸ்தவம் என வந்த அத்தனை மதங்களும் தமிழர்களால் வரவேற்கப்பட்டன. மக்கள் தாம் விரும்பிய இறைநெறிகளைப் பின்பற்ற எப்போதும் தடை இருந்ததில்லை. இச்சிந்தனை மானுடத்தைப் போற்றும் மனப்பான்மையில் இருந்து எழுந்ததே.

(30ம் பக்கம் வருக)



கனடா மூர்த்தி

# கண்டதை மீண்டும் சொல்லுகிறேன் - 3

யாழ்ப்பாணப் பயணம் இப்போதெல்லாம் அவ்வப்போது மனச் சோர்வையும் தருகிறது என்றால் அது பொய்யல்ல. காரணம்? கண்டதை மீண்டும் சொல்லுகிறேன்.

அன்று யுத்தம் யாழ்ப்பாணப் பகுதியின் கட்டுமானங்களைச் சிதைத்தது. ஆனால் அந்தச் சிதைவுகள்கூட போராட்ட ஓர்மத்தை ஊக்குவித்து நின்றன. இன்று போராட்டமில்லை. குண்டுகள் இல்லை. புதிய புதிய கட்டுமான - ங்கள் நகரெங்கும் உருவெடுக்கின்றன. போரின்பின் எழுச்சியோடு வரவேண்டிய அந்த புதிய கட்டுமானங்கள் எப்படி அமைகின்றன? ஏமாற்றம்தான்.

உலகளாவிய நிலையில் ஏற்கப்பட்டிருக்கும் கட்டிடக்கலை விதிமுறைகள் யாழ்ப்பாண நகரத்தில் பின்பற்றப்படுவதில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. ஒவ்வொரு கட்டிட உரிமையாளரும் தாம் விரும்பியவண்ணம் தமக்கான கட்டிடங்களை அமைத்துவிடுகிறார் - கள். தனியார் மட்டுமல்ல, அரச நிர்வாகங்களும் அங்ஙனமே. பழைய கட்டிடங்கள் சிதிலமடைகின்றன. யாழ்ப்பாண மாநகர சபையின் அனுமதிப் பத்திரங்கள் இல்லாமல் கட்டிடங்கள் அமைக்க முடியாது என்பது தெரிந்ததே. ஆயினும் யாழ்ப்பாணம் என்ற நகரத்தின் புதிய கட்டுமானங்கள் கச்சடாமுச்சடா என்றுதான் வளர்கின்றன. "பறவைக் கண்கொண்டு பார்க்கும் மையப்படுத் -தப்பட்ட நகர வடிவமைப்புத் திட்டம்" யாழ்ப்பாண மாநகரசபையிடம் கிடையாதோ என்ற சந்தேகம் இப்போது பெருமளவு வருகிறது.

நவீன காலத்திற்கேற்ற நகரக் கட்டிட வடிவ - மைப்பு முறைமை சிங்களப் பிரதேசங்களில் ஓரளவிற்காவது காண முடிகிறது. ஆனால் ஏனோ நமது தமிழ்ப் பிரதேசங்களில் அது தென்படுவதாயில்லை. உதாரணத்திற்கு சொல்லப்போனால் யாழ்ப்பாணத்தின் பெருமித - மாக நிமிர்ந்து நின்ற யாழ் பொதுசன நூலகமானது அதற்கருகே கட்டப்பட்டிருக்கும் இந்திய கலாசாரமையத்தின் பிரமாண்டத்தில் அமுங்கி சோபையிழந்து நிற்கிறது. புதிய கட்டுமானத்திற்கு அனுமதி தரும்போதே கவனிக்கப்பட்டிருக்கவேண்டிய மரபுடமைசார் விடயம் இது.

ஈழத் தமிழர்களின் பண்பாட்டுத் தலைநகரான யாழ்ப்பாணத்தில் ஒரு சுற்றுப்பயணி தனது பண்பாட்டுத் தாகத்தைத் தீர்க்க என்னதான் செய்வது? எங்கு போவது? எதைப்பார்ப்பது? எதை வாங்குவது? எங்கு வாங்குவது? இந்தக் கேள்விகளை தன்னகத்தே வைத்து எழுந்திருக்க வேண்டிய "சுற்றுப்பயணிகளை மையப்படுத்திய திட்டங்கள்" யாழ்ப்பாணத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. ஈழத்தமிழர் மேன்மையைச் சொல்லும் சுற்றுலாத் தலங்கள் குறித்த புரிதலும், விபரங்களும் மையப்படுத்தப்பட்டவகையில் நம்மிடம் இல்லை. இதற்கு மாறாக யாழ். பிரதேசத்தில் பௌத்த அடையாளங்கள் காணப்படுமிடங்கள் பற்றிய புரிதல் சுற்றுலாப்பயணிகளுக்கு சுலபமாகக் கிட்டிவிடுகிறது.

இம்முறை யாழ்ப்பாணப் பயணத்தின்போது ஈழத்தமிழரின் பெருமிதமிக்க புராதனச் சின்னங்களில் ஒன்றாக நாம் கருதிக்கொண்டிருக்கும் மந்திரிமனையைக் காணச் சென்றிருந்தேன். மன்னர்கள் யாழ்ப்பாணத்தை நல்லூரிலிருந்து ஆண்ட காலத்தில் மன்னனின் மந்திரி ஒருவருக்காக இந்த மாளிகை கட்டப்பட்டதாக சொல்லப் - படுகிறது. அதனால்தான் "மந்திரிமனை" என்று இது அழைக்கப்படுகின்றது. பாழ்ப்பாணத்திலிருக்கும் ஹெரிடேஜ் பில்டிங் இது.



மந்திரிமனைக்கு நான் சென்றிருந்தபோது வளாகத்தில் ஆள் நடமாட்டம் இருப்பதுபோல தெரியவில்லை. வீதியோடிருக்கும் வாசல் கதவு திறந்துதான் கிடந்தது. இரண்டு மாடிகளைக் கொண்ட அந்தக் கட்டிடத்தின் உள்ளே சென்றேன். உடைந்த நிலையில் இருந்தது மந்திரிமனை! கட்டிடத்தின் வெளிக்காட்டுமானத் தோற்றமானது, ஐரோப்பியர் காலத்து கட்டிடக்கலை முறைமையில் அமைந்திருந்தாலும் உள்ளே திராவிட சிற்ப வேலைப்பாடுகளைப் போலிருக்கும் கட்டிட அம்சங்களைக் காணக்கூடியதாக இருந்தாலும் அவையெல்லாம் சிதைவுற்ற நிலையில் காணப்பட்டன.



சுற்று முற்றும் பார்த்தேன். சுவரில் காதல் சின்னம், கெட்ட வார்த்தை என பல்வேறு கிறுக்கல்கள். காவல் இல்லாத இடமாக இருப்பதால் மதுபானம் அருந்துபவர்களும் உள்ளே வந்து போவது சகஜம் என்பதை உறுதி செய்வதுபோல மதுபானப் போத்தல்கள் கிடந்தன. அங்கிருக்கும் அறையை திறந்து உள்ளே

( 30ம் பக்கம் வருக )



அ. முத்துலிங்கம்

# ரூமேனியப் பெண்

சமூக வலைத்தளங்களில் தமிழ் வாழுமா என்ற விவாதம் தொடர்ந்து நடக்கிறது. பத்து வருடங்களுக்கு முன்னர் கனடா வந்து தமிழ் இலக்கியத் தோட்டம் வழங்கிய விருதை பெற்றுக்கொண்ட எலினா ரோபோறஸ் ஞாபகத்தில் வந்தார். தமிழில் ஒரு வார்த்தை தெரியாத 19 வயது ரூமேனியப் பெண் இவர். அந்த வருடம் தமிழ் பற்றிய கட்டுரை போட்டியில் முதல் இடம் பெற்றிருந்தார். அவருடைய பேட்டி நினைவுக்கு வந்தது.

இந்தக் கட்டுரைப் போட்டி பற்றி எங்கே படித்தீர்கள்? இதில் கலந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் எப்படி தோன்றியது.

கடந்த ஒரு வருடமாக நான் இங்கிலாந்தில் ஷெஃபீல்டு பல்கலைக் கழகத்தில் படிக்கிறேன். என்னுடைய ஆய்வு புலம் பெயர்ந்த - வர்களின் அடையாளம் பற்றியது. இதை ஆராய்ந்துகொண்டு போனபோது இணையத்தில் தமிழ் இலக்கியத் தோட்டம் வெளியிட்ட அறிவித்தலைப் பார்த்தேன். என்னு -டைய ஆராய்ச்சி ஆர்மீனியர்களு -டைய புலம்பெயர்தலை அடிப்படையாகக் கொண்டது. அந்த ஆராய்ச்சியை இன்னும் விரிவாக்க இந்தக் கட்டுரை பயன்படும் என்று தோன்றியது. ஆகவே பங்குபற்றி -னேன். அப்பொழுதுதான் தமிழர்களின் உலைதல் பற்றியும், அலைதல் பற்றியும் விரிவாக அறிந்துகொள்ள முடிந்தது.

உங்கள் பின்னணி பற்றி கொஞ்சம் சொல்லுங்கள்?

நான் ரூமேனியாவில் பிறந்து வளர்ந்தவள். என்னுடைய பெற்றோர் இருவரும் மிருக வைத்தியர்கள். 19 வயது வரைக்கும் எனக்கு தமிழர்களைப் பற்றியோ, தமிழ் மொழி பற்றியோ ஒன்றுமே தெரியாது. ஒரு தமிழரைச் சந்தித்ததும் கிடையாது. சர்வதேச அரசியல் உறவுகள் பற்றி படிப்பதற்கு சிறுவயதில் இருந்தே ஆர்வம் உண்டு. படிப்பது எனக்கு ஒரு பொழுதுபோக் - குப்போல. அந்நியமான ஓர் இனத்தின் கலாசாரம், மொழி பற்றி படிப்பது எனக்கு அதிமகிழ்ச்சி தரக்கூடிய விசயம்.

ரூமேனியாவில் என்ன மொழியில் படித்தீர்கள்? ஆங்கிலத்தில் எப்படி இத்தனை சரளமாகப் பேசவும் எழுதவும் முடிகிறது?

ரூமேனியாவில் ரூமேனிய மொழியில்தான் படிப்பு ஆரம்பத்திலிருந்து இருக்கும். பல்கலைக் கழகப் படிப்புவரை ரூமேனிய மொழிதான். நான் ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாக சிறுவயதில் இருந்தே கற்றேன். புது மொழிகள் கற்பது எனக்குப் பிடிக்கும். இங்கிலாந்துக்கு படிக்கப் போனபோது ஆங்கில மொழியை இன்னும் ஆழமாகக் கற்றுக்கொள்ள முடிந்தது.

உங்கள் கட்டுரைக்கு பரிசு கிடைத்தபோது எப்படி உணர்ந்தீர்கள்?

பரிசு வென்றது பற்றி எனக்கு தொலைபேசி வந்த சமயம் நான் ஆழ்ந்த நித்திரையில் ஒரு கனவில் இருந்தேன். பரிசு அறிவிப்புச் செய்தி அந்தக் கனவின் தொடர்ச்சி என்றே நினைத்தேன். பரிசுச் செய்தி கனவல்ல, உண்மைதான் என்று புரிய எனக்கு சில நிமிடங்கள் எடுத்தன. என்னால் நம்பவே முடியவில்லை.

தமிழைப் பற்றியோ, தமிழரைப் பற்றியோ, அவர்கள் புலம்பெயர்வு பற்றியோ உங்களுக்கு ஒன்றுமே தெரியாது. ஒரு தமிழரைக்கூட சந்தித்தது கிடையாது என்று சொல்லியிருக்கிறீர்கள். அப்படியிருக்க 'தமிழ் அடையாளம் _ மீள நிறுவுதல்' என்று கட்டுரை எழுத உங்களால் முடிந்திருக்கிறது. இது எப்படி சாத்தியமானது?



நான் அதிர்ஸ்டக்காரி. என்னுடைய பல்கலைக்-கழக வகுப்பில் எப்படி ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்பதை கற்றுத் தந்திருக்கிறார்கள். ஒரு சமூக விஞ்ஞானி எதை எதை உன்னிப் - பாகப் பார்க்கவேண்டும், எதை ஆராய வேண்டும் என்று எனக்கு கற்பிக்கப்பட்டிருந்தது. அற்புதமான ஆங்கில நூல்கள் நூலகங்களில் அகப்பட்டன. இணையத்தில், உலகில் எந்த மூலையிலிருந்து எழுதிய கட்டுரையும் கணத்தில் இலகுவாகக் கிடைத்தது. மூன்று வாரங்கள் வேறு ஒன்றுமே செய்யாமல் தொடர்ந்து ஆராய்ச்சி செய்து எழுதிய கட்டுரை இது.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தங்கள் மொழியையோ கலாசாரத்தையோ தொடர்ந்து பேணமுடியுமா? எதிர்காலத்தில் தமிழ் வாழுமா?

முடியும். அதைத்தான் என் கட்டுரையில் அழுத்தமாகச் சொல்லியிருக்கிறேன். முன்னெப்போதும் இல்லாத வகையில் இப்போது தொடர்பு சாதனங்கள் பெருகியுள்ளன. புலம் பெயர்ந்த தமிழர்கள் ஏறக்குறைய பத்து லட்சம் மக்கள் நியூசீலாந்தில் இருந்து கனடாவரை பரவியிருக்கிறார்கள் என்று தரவுகள் சொல்கின்றன. நவீன தொழில்நுட்பம் இடைவெளி இல்லாமல் செய்திருக்கிறது. இணையம், முகப்புத்தகம், மின்னஞ்சல், ட்விட்டர், ஸ்கைப், செல்பேசி என கணத்தில் மக்கள் உலகம் முழுவதும் ஒன்று சேர்ந்து கருத்தை உருவாக்க முடியும். இப்படியான வசதி முன்னர் இருந்தது கிடையாது. மனிதன் உலக வரலாற்றின் அற்புதமான புள்ளியில் நிற்கிறான். 'ஐஃபோன் புரட்சி' என்ற சொற்றொடர்கூட வந்துவிட்டது. நான் ஆராய்ந்த வரையில் புலம் பெயர் தமிழர்கள் வியக்கத்தக்க வகையில் தங்கள் கலாசாரத்தை, மொழியை முன்னெடுத்துச் சென்றுகொண்டே இருக்கிறார்கள். கனடா போன்ற நாட்டின் பல்கலாசார அணுகுமுறை, வெவ்வேறு மொழிகள் வளருவதை ஊக்குவிக்கிறது. இது எங்கேயும் காணமுடியாத ஒன்று. சந்தேகமே இல்லை. தமிழ் வாழும்.

ஊஞ்சலை ஆட்டிக்கொண்டே இருக்கவேண்டும். அல்லாவிடில் ஒருகட்டத்தில் அது ஓய்ந்து போகும். தமிழும் அப்படித்தான். அதைப் பேசிக்கொண்டே இருக்கவேண்டும். நாம் பேசுவதை நிறுத்தினால் தமிழும் நின்று போகும்.

# Breadfruit (ஈரப்பலாக்காய்) is one of the superfoods

Breadfruit is a versatile fruit that belongs to the mulberry and jackfruit botanical family. They grow across tropical regions and the Pacific Islands, Caribbean, and Southeast Asia. Because of their availability, they are part of a staple diet in these locations. The common areas include Indo - nesia, the Philippines, Sri Lanka, and Southern India. In addition, due to its nutri -tional profile, breadfruit is full of health benefits. For example, it is rich in vitamin C and thiamine. It also contains a high amount of dietary fibre.

The name breadfruit comes from the apparent association with bread. People cook the semi-ripe food, and the texture resembles that of bread with a hint of potato-like flavour. The roasted seeds taste like chestnuts, and you can eat them boiled or baked or ground into flour.





Breadfruit brings various health benefits to you. For example, it has anti-cancer properties, helps improve digestion, improves bone health etc. In addition, breadfruit flour is gluten-free and has a low glycemic index. Therefore, it is an excellent option for people with diabetes.

Breadfruit is one of the superfoods. It is a daily staple food for millions across the globe. It is due to its expansive nutrient profile. In addition, breadfruit enhances different dishes, ranging from soups to pasta.

## Nutritional Value of Breadfruit

Breadfruit is rich in vitamins, minerals, and other components. Also, they contain vitamin E, vitamin C, vitamin K, and B complex vitamins. They also contain minerals like folate, potassium, and many others. In addition, breadfruit contains high amounts of dietary fibre.

As per USDA, around 100 grams of breadfruit serving contains:

Calories: 103 kcals Carbohydrates: 27.1 g
Fat: 0.23 g, Protein: 1 g, Fibre: 4.9 g
Vitamins and Minerals
Breadfruit also contains fair amounts of vitamins and minerals.
Potassium: 490 mg, Vitamin K: 0.5 mg
Calcium: 17 mg Folate: 14 mg
Iron: 0.5 mg, Vitamin B6: 0.1 mg
Vitamin C: 29 mg , Vitamin E: 0.1

### Health Benefits of Breadfruit

Breadfruit has a rich nutrient profile. Therefore, the health benefits are innumerable. It is abundant in fibre. It is an excellent source of proteins, essential amino acids, vitamin C, B1, B5, and minerals. These nutrients help strengthen the immune system by reducing the chances of infections. They also improve skin and hair and aid in bone growth. In addition, the nutrients regulate diabetes, lower cholesterol levels, and boost skin and hair health.

## Improves Heart Health

Breadfruit is rich in potassium. Potassium helps in smooth blood flow through the arteries. It does so by regulating muscular contraction in the heart. It, in turn, controls your heart rate and blood pressure.

High levels of bad cholesterol result in multiple cardiovascular diseases. These diseases include atherosclerosis, heart attack, stroke etc. Studies show that dietary fibre helps in reducing cholesterol. This correlation is because fibre binds with cholesterol and carries it out of the body. In addition, omega-3 fatty acids help increase good cholesterol levels.

## Prevents and Controls Diabetes

Breadfruit is an ideal food for people with diabetes. Since they are abundant in dietary fibre and protein, they are a protein-dense, low glycemic option. A study suggested that breadfruit flour helps control blood sugar levels in people with diabetes. Fibre passes through the digestive tract slowly. As a result, the food takes time to get digested. Thus, blood glucose levels don't shoot up after a meal.

## Aids Digestion

The dietary fibre helps in improving bowel movements. Dietary fibre absorbs water in the intestines and softens the stool. As a result, the stool passes out smoothly. Thus, fibre rich foods like breadfruit prevent constipation and indigestion.They also improve gut health by fostering good bacteria in the body. In addition, studies have suggested that they prevent infections and inflammation by improving immunity.

## Improves Brain Function

Breadfruit is a rich source of iron, vitamin C and many other nutrients. Iron is necessary for the proper functioning of blood cells. They play a significant role in transporting oxygen to all organs. In addition, low iron levels can result in anaemia. Also, due to the lack of iron, the oxygen supply to the brain reduces.

Vitamin C, vitamin E, omega-3 fatty acids are antioxidant nutrients. Studies have demonstrated that antioxidants

(Cntd. on page 32)



முனைவர் பால. சிவகடாட்சம்

# படித்ததும் கேட்டதும் 63

## அமுதமாயினும் தனியாக உண்ணாதோர்

சங்காலப்பகுதியில் பேரரசர்களாக அறியப்பட்ட சேர சோழ பாண்டிய மன்னர்கள் நூற்றுக்கணக்கானோருள் வெகு சிலரையே அவர்களது சமகாலப் புலவர்களும் பாணர்களும் பாடியுள்ளனர். அதேசமயம் சின்னஞ்சிறு ஊர்களை ஆண்டுவந்த குறுநில மன்னர்கள் பலர் மூவேந்தர்களைவிடப் புலவர்களால் பெரிதும் புகழ்ந்து பாடப்பெற்றுள்ளனர் என்றால் அதற்கு அந்தக் குறுநிலமன்னர்கள் ஏழைகளுக்கும் இரவலர்களுக்கும் உணவும் கொடுத்து ஆதரித்துள்ளனர் என்னும் ஒரே ஒரு காரணம் தான் உண்டு.

வள்ளல்கள் பாரியும், காரியும், பேகனும், ஓரியும், ஆய்-அண்டிரனும், அதியமானும், நள்ளியும், நல்லியக்கோடனும் வாழ்ந்து மறைந்து இரண்டாயிரம் ஆண்டுகள் கழிந்துவிட்ட நிலையிலும் தமிழ்மக்களால் இன்றும் பேசப்படுகின்றனர். முல்லைக்கொடியைத் தாங்கிப்பிடிக்கத் தன் தேரையே கொடுத்த வள்ளல் பாரி தன்னைத் தேடிவந்த எழைகளைத் தாங்கிப்பிடித்திருக்கமாட்டானா?

ஒரு மயிலுக்கே போர்வை கொடுத்த பேகன் ஏழைகளுக்குப் போர்வைகளை வாரிக் கொடுத்திருக்க மாட்டானா? இதைத்தான் இவர்களைப் பாடிய புலவர்கள் எமக்குச் சொல்ல வருகின்றார்கள். தமிழர் தவிர்ந்த வேறு எந்த மொழி பேசுவோரும் தங்கள் மத்தியில் வாழ்ந்திருக்கக்கூடிய வள்ளல்கள் பற்றிப் பேசியதில்லை. ஆம். தமிழர் தம் வாழ்வில் தலையாய பணி என்று போற்றி வாழ்ந்தது விருந்தோம்பல் என்னும் ஒன்றை மட்டுமே.

**விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா**
**மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.** - குறள் 82

விருந்தாளி வெளியில் காத்திருக்கும் போது, மரணத்தைத் தடுக்கும் அமுதமாக இருந்தாலும் தனியாகச் சாப்பிடக் கூடாது என்று தமிழ்ப் புலவர் வள்ளுவர் அறிவுறுத்துகிறார். உண்மையில் ஏழைகளுக்கு உணவளிப்பது சங்ககாலத் தமிழர்களின் தலையாய கடமையாக இருந்தது. அந்த மரபின் தொடர்ச்சிதான் வள்ளுவர்.

சங்ககாலத்துப் பெருமக்களின் நல்லியல்புகள் பற்றிப் பேசும் பின்வரும் கவிதையை இயற்றியவன் கடலில் இறந்த இளம்பெருவழுதி என்னும் ஒரு பாண்டிய இளவரசன் ஆவான்.

**உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்**
**அமிழ்தம் இயைவ தாயினும், இனிதுஎனத்**
**தமியர் உண்டலும் இலரே முனிவிலர்**
**துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்**
**புகழ்எனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்**
**உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்**
**அன்ன மாட்சி அனைய ராகித்**
**தமக்கென முயலா நோன்தாள்**
**பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.**
**கடலுள் மாய்ந்த**
- இளம்பெருவழுதி: புறநானூறு 182

இந்திரனுடைய அமுதம் கிடைத்தாலும் அது இனியது என்று தாம் மட்டும் உண்ணும் வழக்கம் இல்லாதவர்கள். கோபம் கொள்ளாதவர்கள். சோம்பல் இல்லாதவர்கள். உலகத்தோர் எண்ணிப்பயப்படும் தீயவிடயங்களுக்குத் தாமும் பயப்படுவர்கள். புகழ் வரும் என்றால் தமது உயிரையும் கொடுப்பவர்கள். பழிவரும் என்றால் இந்த உலகத்தையே கொடுத்தாலும் ஏற்றுக்கொள்ளாதவர்கள். சோர்வில்லாதவர்கள். இத்தகைய சிறப்புக்களை உடைய இவர்கள் தமக்கென உழைக்காது பிறர்க்கென உழைக்கும் உண்மையானவர்கள். இவர்களால்தான் இந்த உலகம் வாழ்கின்றது.

## The Real Asset

Never eat alone even it is elixir.


During the Sangam period, which lasted from around 300 BCE to 200 CE, the land of the Tamils was partitioned and ruled by kings belonging to the three great dynasties of Chera, Chola, and Pandiya. Although there were hundreds of kings who could have ruled during this time, only a few names are known from the poems that praise the deeds of these kings sung by contemporary poets. In contrast, many tribal chieftains were lauded by these poets for their generosity towards the poor and bards. The great donors, such as Pari, Kari, Pekan, Ori, Ai-Andran, Atiyaman, Nalli, and Nalliakkotan, are still remembered by Tamil people even after two thousand years because of their gifts of cloth and food to the needy.

According to the great Tamil poet Valluvar, one should not eat alone when a guest is waiting outside, even if he is served with life - saving elixir. In fact, feeding the poor was considered a prime duty of Tamils during the Sangam era, and Valluvar's teachings were a continuation of that secular tradition.

A Pandyan prince who perished at sea is known to have composed this poem that praises the virtues of great men of the Sangam period (Purananuru 182).

They hold the elixir of gods,
Yet they don't drink it for themselves.
Anger and laziness, they forsake,
And fear the same evils the world does quake
Fame, they seek, and glory too
But not at the cost of dishonor's hue
They'd give their lives to light the way
For others to see the bright of day
Depression doesn't weigh them down
For they wear honor like a crown
They persevere not for their own gain
But for others, their efforts sustain
The world lives on, because of them
These honest men, a precious gem.

# 83 ஆடிக்கலவரம்
# 40 ஆண்டுகள்



ப. ஸ்ரீஸ்கந்தன்

## ஞாபகம் துளிர்க்கிறதே !

26

ஈழவிடுதலைப் போராட்டத்தின் திருப்புமுனையாக அமைந்த, ஈழத்தமிழர்களின் பிரச்சனையை உலகறியச் செய்த அல்லது ஈழத்தமிழர்களை உலகெங்கும் இடம்பெயரச் செய்த 1983 ஆடியில் அரங்கேறிய இனஅழிப்புக்கு நாற்பது வயதாகிறது. பயமும் வேதனையும் கோரக்காட்சிகளும், ஒரு கணத்தில் வாழ்வைத் தொலைத்துவிட்ட அகோரமும் அவமானமும் என்று அந்த உணர்வுகள் இன்றும் நெஞ்சைப் பிழிந்து விடுகிறது.

அப்போது நான் கொழும்பில் கொட்டாஞ்சேனையில் 98 சப்பாத்து வீதி என்ற விலாசத்தில் அறையெடுத்து தங்கியிருந்தேன். அந்நாளில் உயரக் கட்டிடமாக அறியப்பட்ட சிலிங்கோ கட்டிடத்தின் ஏழாவது மாடியில் ஒரு கம்பனியில் வேலை செய்து கொண்டிருந்தேன். வார இறுதி நாட்களில் சென்.பெனடிக்ற்ஸ் கல்லூரியில் உயர்தர மாணவர்களுக்கு பௌதிகம் படிப்பித்து வந்ததால் அப்பகுதியில் நன்கு அறியப்பட்ட ஒருவனாக இருந்தேன். கதாநாயகனாக வலம் வந்த நான் ஒரே நாளில் அந்தக் கல்லூரியில் அகதியாகத் தஞ்சமடைந்த சாபக்கேட்டை நினைக்கும்போது இன்றும் மனம் குறுகிப் போகிறது.

ஆடி 23, 1983 சனிக்கிழமை இரவு யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் பலியான 13 ராணுவத்தினரின் உடல்களைக் காவிச் சென்ற அம்புலன்ஸ் வண்டிகள் கொழும்பு வீதிகளில் ஏற்படுத்திய சத்தம் சிங்களவர்களை அருட்டி விட்டது. வழமையாக புன்முறுவல் செய்யும் சிங்கள நண்பர்கள் முகத்தைத் திருப்பி சென்றார்கள். திங்கள் காலை வேலைக்குச் சென்று சிலிங்கோவின் ஏழாவது மாடியில் நின்று பார்த்தபோது பொரளை, கோட்டைப் பக்கம் தீப்பிழம்பும் புகைமண்டலமும் தெரிந்தன.

தமிழின அழிப்பின் பயத்தை, பயங்கரத்தை உணர ஆரம்பித்தேன். செய்திகள் பரவி, பாதுகாப்புக் காரணமாக வேலைத்தலங்கள் பூட்டப்பட்டு நாங்கள் வீதியில் இறக்கி விடப்பட்டோம்.

கோட்டைப் பக்கம் ஒரே புகைமண்டலமாக இருந்தது - போக முடியவில்லை. காலி வீதியால் போகத் தொடங்கினேன். ஓட்டமும் நடையுமாக உயிரைக் கையில் பிடித்தபடி என்னைப்போல் பலர் போய்க் கொண்டிருந்தனர். முகங்களில் கலவரம் தெரிந்தது.

காலிமுகத்திடல் பகுதியில் கார்களில் சென்ற தமிழர்கள் அடையாளம் காணப்பட்டு கத்தியால் குத்தப்பட்டனர். காடையர் கைகளில் பொல்லுகள், வாள்கள், கத்திகள், பெற்றோல் கலன்கள் இருந்தன. எங்கும் ஒரே சத்தம். தெமிலு.....
கப்பாண்ட......மரண்டோனே.... அந்தக் கொலைக்களத்தை ஆண்டவனை வேண்டியபடி கடந்து சென்றேன். மரணபயம் பற்றிக் கொண்டது.

இரத்தத்தில் தோய்ந்தவர்களும் எங்களுடன் நடந்து கொண்டிருந்தனர். யார் யாரைக் காப்பாற்றுவது?
நடப்பவைகளை பொலிசார் வேடிக்கை பார்த்தனர்.

அன்று இரவு வட இந்தியரான எனது முதலாளியின் வீட்டில் தங்கி, பின்னர் சென்.பெனடிக்ற்ஸ் கல்லூரியில் அகதியாய் தஞ்சமடைந்தேன். 25ம் திகதி வெலிக்கடை சிறைச்சாலையில் சக கைதிகளால் கொல்லப்பட்டவர்களின் பெயர்களை இலங்கை வானொலி வாசித்தது. அந்தச் செய்தி மேலும் அச்சத்தைத் தந்தது. வாசிக்கப்பட்ட பெயர்களில் குட்டிமணி, தங்கத்துரை, சிவபாதம் மாஸ்ரர் போன்ற பல பெயர்கள் தெரிந்தனவாக இருந்தன.

முகாமில் என் பெயரை அகதியாகப் பதிவு செய்தார்கள். நான் பிறந்த தேசத்தின் தலைநகரில் என்னை அகதியாகப் பதிவு செய்தது எனக்கு வெறுப்பைத் தந்தது.

முகாம் அகதிகளால் நிரம்பியிருந்தது. வகுப்பறைகள், மண்டபங்கள், விறாந்தைகள் அனைத்திலும் சனக்கூட்டம். கொண்டு வந்த பெட்டிகளால் தங்கள் பகுதிகளை அடையாளப்படுத்தி பலரும் ஒதுக்கி வைத்திருந்தனர். எங்களில் சிலர் வெளியிலிருந்த கூடைப்பந்தாட்டத் திடலில் வானத்தைப் பார்த்தபடி படுத்துறங்கினோம். இரு நாட்கள் சாப்பாடு எதுவும் கிடைக்கவில்லை. அடுத்த நாள் ஆமர் வீதி சந்தியிலுள்ள அம்பாள் உணவுக் கடையினர் பாத்திரங்கள் கொண்டு வந்து சோறும் பருப்பும் சமைத்துத் தந்தனர். அங்கு கிடைத்த பத்திரிகைகளை துண்டு துண்டாகக் கிழித்து அதில் உணவை வாங்கி உண்டோம். முகாம் நிலைவரங்கள் மோசமாக இருந்தன.

கொழும்பிலிருந்து வெளிவரும் முன்னணிப் பத்திரிகை ஒன்றின் ஊழியர்கள் முகாமுக்குப் பொறுப்பாக இருந்தனர். காயப்பட்டோர், கர்ப்பிணிப் பெண்கள், வயோதிபர் போன்றோருக்கு முன்னுரிமை வழங்கி அவர்களை கப்பலில் அனுப்பப் போவதாக ஒரு நாள் அவர்களின் பெயர்களைப் பதிவு செய்தனர். அடுத்த நாள் அவர்களை ஏற்ற வந்த பஸ்ஸில் முகாமுக்குப் பொறுப்பாக இருந்த ஊழியர்களும் போய்விட்டனர். எங்களில் சிலர் முகாமைப் பொறுப்பெடுத்தோம்.

இனஅழிப்பு நடந்து 15வது நாள் முகாமில் மீதமாகவிருந்த எல்லோரும் பஸ்களில் ஏற்றப்பட்டு கோட்டை புகையிரத நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டோம். அங்கு ஆறு புகையிரதங்கள் எங்களை யாழ்ப்பாணத்துக்கு ஏற்றிச் செல்ல காத்திருந்தன.

ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தில் இணைந்து யாழ்ப்பாண மாவட்ட தளபதியாகவிருந்து மரணித்த கபூர் என்ற றோயல் கல்லூரி மாணவன் பாலசுப்பிரமணியம், கொழும்பு பாடசாலைகளில் தர்க்கீகம் பத்திரிகை விநியோகித்த இரு இளைஞர்கள் அந்தப் புகையிரதத்தில் என்னோடு பயணித்தனர். இனப்படுகொலையை அடுத்து என் நண்பர்கள் சிலர் வெளிநாடுகளிலிருந்து வந்து இயக்கத்தில் இணைந்து கொண்டனர்.

இவ்வாறு விடுதலைக்கான போராட்டம் உத்வேகம் பெற்றிருந்த நாளொன்றில் ஒரு கோழையைப் போன்று கனடா தூதரகம் தந்த விசேட விசாவோடு நான் விமானம் ஏறினேன்.

# கனடா ஸ்காபரோ அல்பேர்ட் காம்பெல் சதுக்கத்தில் முள்ளிவாய்க்கால் 14வது ஆண்டு நினைவேந்தல்

















# ஈழநல்லூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி





# தமிழர் தகவல் 32வது ஆண்டு பூர்த்தி விழா மலர் வெளியீடும் விருதுகள் வழங்கலும்

கனடியத் தமிழரின் அடையாளமாகத் திகழும் கனடாவின் மூத்த தமிழ் இதழான தமிழர் தகவலின் 32வது ஆண்டு பூர்த்தி விழா அடுத்த மாதம் 8ம் திகதி (08.07.2023) சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. 32வது ஆண்டு பூர்த்தி மலர் வெளியீட்டுடன், 32வது ஆண்டு விருதுகள் வழங்கலும் இவ்விழாவின் பிரதான நிகழ்ச்சிகள்.

ரொறன்ரோவின் மையப்பகுதியில் அமைந்திருக்கும் ரொறன்ரோ நகர சபையின் அங்கத்தவர் சபா பீடத்தில் 8ம் திகதி பிற்பகல் 3:00 மணிமுதல் 6:00 மணிவரை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

அழைக்கப்படுபவர்கள் மட்டும் பங்குபற்றும் விழாவாக இது இடம்பெறுவதால், அவர்களுக்கான அழைப்பிதழ் இந்த மாதம் 23ம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். விழா தொடர்பாக கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குமுறைகள் தனியாக அச்சடிக்கப்பட்டு அழைப்பிதழுடன் இணைக்கப்பட்டிருக்கும்.

ஏதாவது காரணத்தினால் பங்குபற்ற முடியாதவர்கள் மட்டும் 416 920 9250 இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் பெயர் விபரத்தை பதிவுசெய்ய வேண்டும்.



# முள்ளிவாய்க்கால் படுகொலை சம்பவங்களில் பலபத்தாயிரம் தமிழர் உயிரிழந்துள்ளனர்

"முள்ளிவாய்க்கால் படுகொலை உட்பட்ட சம்பவங்களால் பலபத்தாயிரம் தமிழர்கள் உயிரிழந்து, மேலும் பலர் காணாமலாக்கப்பட்டார்கள், காயம் அடைந்தார்கள் அல்லது இடம்பெயர்க்கப்பட்டார்கள். அர்த்தமற்ற இந்த வன்முறையால் ஏற்பட்ட வேதனைகளுடன் வாழும் போரால் பாதிக்கப்பட்டவர்கள், தப்பிப் பிழைத்தோர், அவர்களது அன்புக்குரியோர் ஆகியோரை நாம் இன்று நினைவிற் கொள்கிறோம்".

மே 18 முள்ளிவாய்க்கால் நினைவுதினத்தை முன்னிட்டு கனடிய பிரதமர் ஜஸ்ரின் ரூடோ விடுத்த செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இந்தச் செய்தியின் முக்கிய பகுதிகள் பின்வருமாறு:

"நாடு முழுவதும் நான் கடந்த பல ஆண்டுகளில் சந்தித்தவர்களின் அனுபவங்கள் உட்பட, போரினால் பாதிக்கப்பட்ட தமிழ்க் கனடியர்களின் அனுபவங்கள், மனித உரிமைகள் - சமாதானம் - ஜனநாயகம் என்பவற்றைக் குறைத்து மதிப்பிடக்கூடாது. இதன் காரணமாகவே மே 18 பிரேரணையை கடந்த ஆண்டு கனடிய நாடாளுமன்றம் ஒருமனதாக நிறைவேற்றியது. இந்த மோதலில் பாதிக்கப்பட்டவர்களதும் தப்பிப் பிழைத்தவர்களதும் உரிமைக்காகவும், இலங்கையில் தொடர்ந்தும் நெருக்கடியை எதிர்கொள்ளுவோருக்காகவும் குரல் கொடுப்பதை கனடா நிறுத்த மாட்டாது.

இலங்கையில் 14 ஆண்டுகளுக்கு முன்னர் முடிவுக்கு வந்த ஆயுதப்போரின்போது ஏற்பட்ட துயர் நிறைந்த உயிரிழப்புகள் குறித்து இந்நாளில் நாம் ஆழ்ந்து சிந்திக்கிறோம். இலங்கை அரசிடம் கோரும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்தை எமது சர்வதேச பங்காளிகளுடன் இணைந்து 2022ம் ஆண்டு அக்டோபரில் நாம் நிறைவேற்றினோம். இலங்கைத் தீவில் புரியப்பட்ட மனித உரிமை மீறல்களுக்காக இலங்கை அரசதுறையைச் சேர்ந்த நான்கு பேர் மீது 2023ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் எமது அரசு தடைகளை விதித்தது.

தமிழ்க் கனடியர்கள் எமது நாட்டுக்கு ஆற்றிய மற்றும் தொடர்ந்து ஆற்றிவரும் பல்வேறு பங்களிப்புகளையும் கண்டு உணருமாறு அனைத்துக் கனடியர்களையும் கனடிய அரசின் சார்பில் நான் கேட்டுக் கொள்கிறேன். இலங்கையில் ஆயுதப் போரினால் ஏற்பட்ட தாக்கம் பற்றி அறிந்து கொள்ளுமாறு, பாதிக்கப்பட்டவர்களுக்கும் அன்புக்குரியவர்களை இழந்தவர்களுக்கும் ஆதரவு வெளியிடுமாறும் அனைவரையும் வேண்டுகிறேன்" என்று இந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?
அனுபவசாலிகளின் ஆலோசனை
பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்.
MATRIX LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION
Even if the accident is your fault:
Employed • Unemployed
Passenger • Pedestrian
Public transit
cyclist
WE ARE HERE TO
HELP YOU
இலவச ஆலோசனைகளுக்கு:
தீபன்
24 Hours Direct Line
(416) 831-4444
(416) 505-9804
2190 Warden Ave., Suite 202, Toronto, ON M1T 1V6

# MEDCENTRE HEALTH

SYNCHRONIZING HEALTH SECTORS

medcentrehealth.com

## Serving our community for more than 10 years!

**Urgent Care / Walk-In Clinic - Primary Care - Dermatological Care - Women's Care**



Our Founder & CEO Dr. Senthill Mohan, doctors and staff with Hon. Paul Calandra, the Minister of Long-Term Care & MPPs Hon. Logan Kanapathy (Markham-Thornhill) & Hon. Vijay Thanigasalam (Scarborough- Rouge Park) at the MEDCENTRE HEALTH 10th ANNIVERSARY celebration (4 doctors couldn't attend).

## Markham McNicoll Women's Health Clinic (MMWHC)

Women doctor & staff will address the issues or concerns of women with extreme confidentiality in a women-friendly environment. Started in July 2022

Pap Test, STD tests & treatment, Contraception consultation, IUD insertion & removal, Yeast infection treatment etc.

* Any patient can consult without any referral. *Referral accepted from any doctor.

* Clinic on Thursdays now. Soon on Mondays as well.

* Health card (OHIP) accepted. Call: (416) 331-8888 on weekdays. Fax: (416)331-8089

## Markham McNicoll Dermatology Clinic (MMDC)

*Our Dermatologist (Skin Specialist) treats all aspect of dermatology. His interests include skin cancers and pigmented lesions. Started in July 2020

* Referral accepted from any doctor (Family doctor, Walk-In doctor, or specialist doctor)

* Clinic on Tuesdays & Fridays now. Closed on Weekends & Statutory holidays.

* Health card (OHIP) accepted. Call: (416) 331-8888 on weekdays. Fax: (416) 331-8889.

## Markham McNicoll Family Care Clinic (MMFCC)

* Closed on Sundays & Statutory holidays.

* See our website medcentrehealth.com to book an appointment.

* Health card (OHIP) accepted. Tel: (416) 292-6666 Fax: (416) 292-7770.

## Markham McNicoll Urgent Care Clinic (MMUCC)

* Opens all 365 days. Any time change will be updated daily in our Google page.

* See our website medcentrehealth.com to book an appointment.

* Minimal wait time for booked appointments. Walk-In also accepted.

* Health card (OHIP) accepted. Tel: (416) 609-3333 Fax: (416) 609-3334.

**2901 Markham Road (Markham & NcNicoll intersection), Toronto, ON M1X 0B6**



உங்களிடம் ..
செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
உங்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி!
வணிக உரிமையாளர்களும் சுயதொழில் செய்வோரும்
வருமான மதிப்பீடுகள் இல்லாமல் மாதந்தோறும் $5000 வரை
அங்கவீனக் காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
அஜித் சபாரட்ணம்
647-401-5800 | 416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.

Chapel Ridge

FUNERAL HOME & CREMATION CENTRE

# Serving the Tamil Community

## OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.



### *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

***• Vistation • Funeral & Memorial Service • Reception • Burial • Cremation***

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை





**Christeen Seevaratnam**
416-258-6759

**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

### *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**

- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**

- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1
www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


*A caring part of our community*



AGA
Beauty Skin SPA & Training Center
15, Karachi Drive, Unit 5, Markham On L3S0B5
Body & Face Cream On Sale
Call : 647-716-5252
Defining Beauty with style
Beauty Services
Threading
Waxing
Facial
Hair Cutting
Hair Colouring
Hair Care
Protein Treatment Head
Weight Loss program
bridal
Makeup & Hair style
Henna Designs
Eye Lash Extensions
Skin Tag Removal
Microdermabrasion
Certificate Courses
Hair Styles
Makeup
Bridal
Esthetician Courses
Threading
Waxing
Facial
Hair Care
Hair Colouring
Protein Treatment Head
Eye Lash Extensions
Skin Treatment
Microdermobrasion
Chin Lifting
Saree Wrapping
Saree Blouse Making
ARAJEN BEAUTY & SKIN CARE
2607 Englinton ave east, Unit 4,6,7, Scarbarough, On M1K2S2




JRB GROUP CORPORATION
Loans, Mortgages, Insurance, Visa,
Real Estate, Master Card, Credit Counselling
Best rate Mortgage Arranged
Almost All Services Available
Business Loans 25K to 500,00
புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அல்லது ஆரம்பிக்கப்படவுள்ள
சகல வர்த்தகர்களுக்குமான சிறப்பான சேவை!
FINANCE
R. R. Rajkumar B. Com (Hons), MBA
647–289–6164 / 416–655–5577


Build Your Dream Home
SABESAN'S
CHOICE
We build 10,000sq. feet (minimum) warehouse from 139.00 per sq.feet.
உங்கள் வீட்டுடன் இணைந்ததாக மேலதிக இருப்பிட வசதியை ஏற்படுத்த விரும்புகிறீர்களா?
எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள் !
• 400 Kilometre per hour Wind resistance.
• Termite Proof
• Compare traditional Building Energy Savings.
• Mould Proof
• Sound Resistence
• Roof Top Greenhome
Sabesan
விருது பெற்ற தொழிற்றுறை நிபுணர்
416.605.1990
kgsabesan@hotmail.com


KEV TAX
KNOWLEDGE & EXPERIENCE IS VITAL
www.kevtax.com
* CORPORATE INCOME TAX
* BOOKKEEPING & ACCOUNTING SERVICES
* PERSONAL INCOME TAXES
* QUALITY SERVICE WITH REASONABLE FEES
* FREE YEAR-ROUND CUSTOMER SERVICE
* CORPORATE AND SOLE PROPRIETORSHIP BUSINESS REGISTRATION
SENIORS / WELFARE RECIPIENTS
ALL RETURNS INCLUDE EFILE SERVICE
FREE EFILE SERVICE
Ganthiy Selvarajah
(B.A. Sri Lanka)
TEL: 416.841.1866
FAX: 1.888.841.8829
kevtax.ganthiy@gmail.com


Just Sold!
RAVE
Another SOLD
$ 206,000
Over Asking Price
18 Brackenridge St,
Ajax, Ontario
Rossland & Salem
- Contact us for a Free Home Evaluation! (no obligation)
- For personalized Tour & Other Property Information Call Us today!
- Free home staging
Before you list Call me
You can see the Difference
Highest price in the same street
P.Raveenthiran
Real Estate Broker
416-567-2462
realtor.rave@gmail.com
HomeLife/Future Realty Inc.,Brokerage
205-7 Eastvale Dr,Markham ON. L3S 4N8
Bus: 905.201.9977 | Fax: 905.201.9229
HOMELIFE
HIGHER STANDARDS


Financial Services
42 YEARS IN BUSINESS
KASI
THIRU
M. KASIPPILLAI & SONS INC.
3228 Eglinton Ave. E., Suite #3, Scarborough, Ont. M1J 2H6
Tel.: (416) 267-8221 Fax: (416) 267-0620


ABBIRAMI
CATERING AND TAKE OUT SERVICE
அபிராமியின்
வாழையிலை
விருந்து
Tel: (416) 266-5372
2619 Eglinton Ave. East,
Scarborough, Ont M1K 2S2
(Between Brimly & Midland)


முருகன் புத்தகசாலை
MURUGAN
BOOK STORE
K. Makesan
Manager
5215 Finch Ave E #109,
Scarborough ON
mahesan.ka@gmail.com
416 321 0285


Babu Florist Ltd.
6055 Steeles Ave, Unit C114, Scarborough, Ontario. M1X 0A7
Temple, Wedding, Funeral & Others
Indian Malai & Jasmine Flowers Available
Call : M.Babu
416-754-8282
www.babuflorist.com
Email : info@babuflorist.com


BAYVIEW HOMES
DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml


சிவஸ்ரீ
சிவ. ஜனார்த்தன
குருக்கள்
647-449-6542
aarthananyathu@gmail.com
aarthanan@hotmail.com


KANAGAAMBIKAI
GOLD HOUSE
We Sell
*Singapore Jewellery
*Finest Quality 22K Gold
*Diamonds/ Birth Stones/
Jewellery/ Watches
We Provide
*Jewellery Repairs
Gold Items
3160 EGLINTON AVE,E.,UNIT #3,
SCARBOROUGH,ON M1J 2H4
Tel:416-269-7197


8 Shadlock St Unit #6,
Markham, ON L3S 3K9
Tel : 416-321-7552
INDRAN SWEET
& Ice Cream



வேதநாயகம் தபேந்திரன் - இலங்கை

# உண்டியல்

“உண்டியலில் காசு போடுறன். அதை வச்சுத் தங்கச்சியின் கலியாண வீட்ட நடத்துங்கோ”

போர் தந்த புலம்பெயர் வாழ்வால் எம்மவருடன் புதிதாகத் தொற்றிக் கொண்ட ஒரு சொல்லாடல் தான் இது.

போர் வெம்மை, பொருளாதாரத் தேவை கருதிச் சட்டத்திற்குப் புறம்பான வழிகளில் எம்மவர்கள் சில இலட்சம் பேர் புலம் பெயர்ந்தார்கள். தாம் வசிக்கும் நாடுகளில் தொழில் அனுமதிப் பத்திரம் பெற்றோ,பெறாமலோ வேலை செய்தார்கள். அங்கு உழைத்த பணத்தை சட்டரீதியாக வங்கி ஊடாக அனுப்ப முடியாத நிலை பெருமளவுக்கு இருந்தது. அப்போது தான் உண்டியல் மூலமாகப் பணத்தைத் தாயகத்திற்கு அனுப்பும் ஒரு தொழில் உருவானது.

வெளிநாட்டில் உள்ள தமக்கு நம்பிக்கையான ஒருவரிடம் இலங்கைக் காசுப் பெறுமதிக்கு ஒரு இலட்சம் ரூபா கொடுக்கிறாரென வைத்துக் கொள்வோம். அப்பணத்தில் தொண்ணூறு ஆயிரம் ரூபாதான் இலங்கையில் உள்ளவருக்குக் கொடுப்பார்கள். மிகுதி பத்து ஆயிரம் ரூபாவில் ஐந்து ஆயிரம் ரூபா வெளிநாட்டில் காசைப் பெற்றவருக்கும், மிகுதி ஐந்து ஆயிரம் ரூபா இலங்கையில் காசைக் கொடுக்கும் முகவருக்குச் சேரும்.

இது உதாரணத்திற்குச் சொல்லும் கணக்கு மட்டுமே. இதன் தாற்பரியங்கள் பல வகைப்படும்.

உண்மையில் வங்கிகள் அல்லது அனுமதிக்கப்பட்ட நிதி முகவர் ஊடாக இல்லாது இவ்வாறு பணம் அனுப்புதல் சட்ட விரோதமானதாகும். பிடிபட்டால் தண்டனைக்குரிய குற்றமாகும். இந்த உண்டியல் முறையில் பணம் அனுப்புவதற்கான தரகுப்பணம் அதிகம் என்பதால் வதிவிட உரிமையை எம்மவர்கள் பெற்றபோது அனுமதிக்கப்பட்ட நிதி முறைமையின் ஊடாகப் பணம் அனுப்பும் முறையைக் கையாண்டார்கள். இதனால் உண்டியல் முறைமை பெருமளவுக்குச் செல்வாக்கு இழந்து போனது.

உண்டியல் எனும் ஒற்றைச் சொல்லுக்கு எமது வாழ்வியலுடன் பல பரிணாமங்கள் உள்ளது. காலம் தான் அத்தகைய பரிணாமங்களைத் தீர்மானிக்கிறது.

சல்லி முட்டியில் காசு சேர்க்கிறேன் எனச் சிறுவயதில் சொல்லியபடியே சேமிப்பின் முக்கியத்துவம் உணர்ந்து காசு சேர்த்த தலைமுறையை இன்று காணமுடியாது. ஒரு சதம், இரண்டு சதம், ஐந்து சதம், பத்துச் சதம், இருபத்து ஐந்து சதம், ஐம்பது சதம் எல்லாம் பெறுமதியாக இருந்த ஒரு காலத்தில் சட்டி, பானை போல மண்ணால் செய்த சல்லி முட்டியில் காசு சேர்த்தார்கள். சல்லி முட்டி நிறைந்ததும் அதனை உடைத்து காசை எண்ணிப் பார்த்து எடுத்து அதனைத் தாள் காசாக்கி தமது தேவைகளை நிறைவு செய்தார்கள்.

பின்னாளில் தகரப் பேணியில் செய்த உண்டியல் வந்தது. உண்டியல் வாங்கும் காசை மிச்சம் பிடிப்பதற்காக தகரத்தாலான பால்மா பேணியின் மேல் பேப்பரால் ஒட்டி பேணியின் மூடியில் குறுக்காகத் துளைத்து அதனுள் சில்லறைக் காசு மட்டுமல்ல தாள் காசும் போட்டுச் சேமித்தார்கள்.

பிளாஸ்ரிக்கில் செய்து வர்ணம் தீட்டப்பட்ட உண்டியலும் புழக்கத்திற்கு வந்தது. உண்டியலில் காசு சேர்த்து அதனை வருடத்தில் ஒரு தேவைக்குப் பயன்படுத்திய வாழ்க்கைமுறை மிகப் பெருமளவில் எம்மிடமிருந்து விடைபெற்றுப் போனது.

கோயில் உண்டியல் முறைமை காலாதி காலமாக எம்முடன் தொடர்கிறது. சைவ சமயத்தவரது கோயில்களில்தான் இந்த உண்டியல் முறை பிரபலமானது. முன்னாளில் கோயிலின் பிரதான வாசல் அருகே ஒரு உண்டியல் வைத்திருப்பார்கள். அதில் பக்தர்கள் இடும் பணத்தை எடுத்துக் கோயிலின் நிர்வாகச் செலவு ஒன்றை ஈடு செய்த ஒரு காலம் இருந்தது. பின்னாளில் செலவுகள் பெருத்து நன்கொடையாளர்கள் வீங்கிப் பெருத்த போது யானைப் பசிக்குச் சோழப்பொரி போல உண்டியல் வந்து விட்டது. இந்நாளில் ஒரு கோயிலில் பல உண்டியல்கள் இருப்பதைக் காணலாம். ஊரில் தெருவோரம் உள்ள கோயில்களில் உண்டியல் வைக்கும் முறை வந்து விட்டது. காஸ் சிலிண்டரைத் தலை கீழாக்கி அதனை உண்டியலாக்கிய கோயில்களும் உண்டு.

இந்தியாவின் திருப்பதி கோயில் உண்டியல்தான் உலகின் மிகப் பிரமாண்டமானதும் நாளாந்தம் பல இலட்சம் ரூபா பணம் கிடைப்பதுமான உண்டியல் எனலாம். இந்தக் கோயிலையும் உண்டியலையும் ஒருமுறை தரிசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

கட்டுக் கட்டாகக் காசையும், கொத்துக் கொத்தாகச் சில்லறைகளையும், ஏன் தங்க நகைகளையும் பக்தர்கள் காணிக்கையாக இடும் உண்டியல் திருப்பதிதான்.

சீசீரிவி கண்காணிப்புக் கமெரா முன்னிலையில் உண்டியல் காசு நாளாந்தம் எண்ணப்படும். சில்லறைக் காசுகளை ஒரு அரிதட்டில் கொட்டுவார்கள். அந்த அரிதட்டில் சில்லறைகள் அவற்றின் பெறுமதிக்கு ஏற்ப ஒவ்வொரு அளவில் ஒவ்வொரு இடத்தில் விழும். அவற்றை எண்ணி எடுக்காமல் நிறை அடிப்படையில் காசுப் பெறுமதி அளவிட்டுக் கோயிலின் வருமானமாக வைத்துக் கொள்வார்கள்.

பஸ் போக்குவரத்தின் போது பார்த்திருக்கிறேன் நம்பிக்கைக்குரிய சில கோயில்களின் முன்பாக பஸ் நிற்கும். பஸ்சின் நடத்துனர் ஓடிச் சென்று சில்லறைக் குற்றி ஒன்றைப் போட்டுக் கும்பிட்டு விட்டு ஓடி வந்து பஸ்சில் ஏறுவார்.

சில இடங்களில் கோயில் அருகே பஸ் நிற்கும். கோயிலின் அடியார் ஒருவர் பஸ்சில் உண்டியலுடன் ஏறுவார். பக்தர்கள் உண்டியலில் சில்லறையை இட்டு விபூதி, சந்தனம் எடுத்துத் தரிப்பார்கள்.

(32ம் பக்கம் வருக)

**கனடிய மத்திய அரசின் தொகுதிகள் மாற்றங்களுக்கமைய, ரொறன்ரோவின் 25 தொகுதிகள் 24 ஆக குறைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் டொன்வலி கிழக்குத் தொகுதி இல்லாது போகவுள்ளது. இத்தொகுதியின் முக்கிய சில தொகுதிகள் அருகாமையிலுள்ள தொகுதிகளுடன் இணைக்கப்படுகின்றது. இந்த மாற்றத்தினால் ரொறன்ரோ நகரசபையின் வட்டாரங்களும் 24 ஆகலாமென அஞ்சப்படுகிறது. இது தொடர்பாக ரொறன்ரோ நகரசபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ள கருத்துகள் கீழே ஆங்கிலத்தில் இடம்பெறுகிறது.**



# Plans to cut Toronto riding 'A SLAP ON THE FACE' Say local politicians

Local lawmakers say Elections Canada's proposal to cut a federal riding in Toronto will decrease representation at all levels of government.

All of Toronto city council — barring one member — are demanding Elections Canada cancel plans to cut a federal riding from Toronto, a decision they fear will end up losing the growing city crucial political representation at all levels of government.

"Don't touch Toronto," said Coun. Lily Cheng (Ward 18 Willowdale), at a press conference last month, flanked by Liberal MP Michael Coteau and Liberal MPP Adil Shamji, who both represent Don Valley East, which will effectively be split into three and eliminated if the North York riding boundary redistribution is finalized.

"By reducing the number of ridings in Toronto, the federal government is further silencing the diversity in our community," said Cheng.

Both Coteau and Shamji criticized the consultation process, which they say failed to give the community a chance to weigh in on proposed changes and the impact it will have, with Shamji pointing to the discussion around moving the Ontario Science Centre to Ontario Place as an example of the need for strong local representation.

Coteau has said provincial legislation, including the Representation Act and the City of Toronto Act, mean that a loss of a federal riding will almost certainly result in a loss of a provincial riding and a council seat.

"I think it's actually a slap in the face," said Coun. Jon Burnside, Ward 16 (Don Valley East), arguing that this decision will especially impact newcomer and racialized communities, which form a significant part of the riding, without their input. According to the 2021 census, about one-fifth of the riding is Muslim and about 18 per cent are not Canadian citizens.

Deputy Mayor Jennifer McKelvie said there will be conversations with the province about what a federal riding change will mean for the number of city councillors, which was already cut in half by Premier Doug Ford in 2018.

The federal government did not kick in any money to cover the city's $815-million COVID-related shortfall from 2022 and the books are being closed with only provincial contributions, McKelvie said.

Nevertheless, the city is still asking for 2023 COVID bailout money from Ottawa as well as funding for transit, shelters and refugees, along with a new fiscal framework for funding municipalities.

"We need as many MPs as possible on the Hill advocating for that," McKelvie said.

Cheng and other councillors presented Coteau with a letter, signed by all councillors other than Coun. Stephen Holyday, supporting Coteau's efforts to stop Toronto from losing a riding.

Holyday said he has "been consistent over the years in supporting a smaller city council, as has been the public."

(Courtesy: Toronto Star)

# கௌசிகர்



இயற் பெயர்: ஜெயசீலன். கணிக்கவும் கவனிக்கவும் வைத்த பெயர் கௌசிகர். அமரர்களான தம்பிப்பிள்ளை திலகவதி தம்பதி இவரது பெற்றோர். பிரேமா காலஞ்சென்ற சரோஜினி, அனுசியா ஆகியோரை சகோதரிகளாகப் பெற்றார். ஆதிமயிலிட்டியில் 21. 01. 1961 ல் பிறந்தார். ரொறன்ரோவில் 04. 05. 2023 ல் உலகை மறந்தார்.

தமிழ் மக்களின் அத்தியாவசிய சமய சம்பிரதாய தேவைகளை துல்லியமான கணிப்பு முறைகளினால் மேன்மையூட்டினார். அவற்றுள்ளும் முகூர்த்த நிர்ணயம் விரத நிர்ணயம் ஆகியவற்றில் நுணுக்கமான கணிப்பு முறைகளால் புதிய மரபை ஏற்படுத்தி தனித்துவம் பேணினார். தெய்வ அருள் தெய்வ ஆசி தெய்வ நம்பிக்கை ஏற்பட ஏதுவாக கும்பாபிசேகம் திருவிழா பூஜை விரதம் முகூர்த்தம் போன்ற முக்கியமான கணிப்புகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்தார். ராகு காலம் போன்ற விடயங்களில் நடைமுறை - யில் உள்ள பிழைகள் களைவதில் தீர்க்கமான கரிசனை கொண்டிருந்தார்.

எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்நோக்க இயலுமானவரை போராடினார். பாரம்பரிய பஞ்சாங்களில் உள்ள முரண்பாடுகளுடன் முரண்பட்டார். யாழ்ப்பாண கணிப்பு முறை உலகரீதியாக ஒத்துப் போகாதையும் ஒவ்வொரு நாட்டிற்கெனவும் கணிக்கப்படும் கணிப்பு முறையே உகந்ததும் உன்னதமானதும் என நம்பிக்கையூட்டினார். சூரியோதயத்தில் அக்கறை அற்றவர்களின் பிழையான பஞ்சாங்க கணிப்பு பிழையான பலனையே விளைவிக்கும் என அவர் திருப்பித் திருப்பி கூறினார்.

இலங்கையில் மழையெனின் இங்கிலாந்தில் குடை பிடிப்பதால் பயன் ஏதும் இருக்காது என்ற தனது பிரபலமான வாக்கியம் ஊடாக யாழ்ப்பாண நேரக்கணிப்புள்ள பஞ்சாங்கங்கள் உலகின் இதர நாடுகளுக்கு பயன் தர மாட்டா என்பதனை மனங்களில் பதிய வைத்தது அவரது பாணி. எவருக்கும் சுட்டிக்காட்ட வேண்டிய பஞ்சாங்கப் பிரச்சனைகளை துணிவுடன் எடுத்துரைக்க என்றுமே அவர் தயங்கியதுமில்லை! எவ்வித கணிப்புகளையும் விளக்கமாகவும் சுருக்கமாகவும் எடுத்துக்காட்டிட என்றுமே அவர் பதுங்கியதுமில்லை!

தமிழீழ கட்டுமானத்தில் தனது தமிழ்த்தாய் நாட்காட்டிக்கு ஒரு தனி இடம் இருக்கச் செய்தார்.

உலகை உலுப்பிய கொடிய நோயின் அசுமாத்தம் கிஞ்சித்தும் இல்லாத 2019 ஜனவரியில் அதன் பயங்கரம் பற்றிக் கணித்து பாமரனிடத்தும் ஆருட அறிவை பறை சாற்றினார். தனது கணிப்புத் திறனை கற்றவர் மூலம் கௌசிகர் நாட்காட்டி வழமைபோல் வெளிவர வழிவகுத்தார்.

நாடு நலன் பெற நல்லன செய்யும் சோதிட விற்பன்னராக சாணக்கியனாக வாழ்ந்தார். மறைந்தார்.

**- எஸ். ஜெகதீசன்**

Real estate excellence, every time.

Rajmogan Selliah
Sales Representative

Direct: 416 569 3200
Email: srajmogan@gmail.com

Buy | Sell | Lease | Invest

210 - 80 Corporate Drive,
Toronto, ON M1H 3G5
Office: 416 284 5555



Residential, Commercial and Investment Properties

# கண்டதை மீண்டும் சொல்லுகிறேன்...

சென்றேன். உள்ளே யாரோ உறங்கியதற்கான சாட்சியாக துணிகள் கிடந்தன. அதிர்ச்சியாக இருந்தது.

இது சாதாரண கட்டிடமா? 15ம் நூற்றாண்டில் இக் கட்டிடம் கட்டப்பட்டிருக்கவேண்டும். கட்டியது பரநிருபசிங்கர் என படித்த ஞாபகம். இக் கட்டிடத்தின் மையப்பகுதியே மிகப்பழமையானது என்றும் பிற பகுதிகள் - குறிப்பாக முகப்புப் பகுதிகள் - பின்னர் அந்நியரால் கட்டப்பட்டவை என்றும் சொல்வார்கள். இந்த மனைக்கு அருகாமையில்தான் நமது பழமைக்கு ஒரு அடையாளமான சங்கலித் தோப்பு இருக்கிறது. போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபின் நல்லூரிலிருந்த தலைநகரை யாழ்ப்பாண நகருக்கு மாற்றியமைத்துள்ளனர். நல்லூரில் எஞ்சியிருந்த அரச கட்டிடங்களும், நிலங்களும் போத்துக்கீசரின் அப்போதைய பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அப்படி பயன்படுத்தப்பட்டதொரு பணிமனையாக இந்த மந்திரிமனையும் இருந்திருக்கிறது என்கிறார்கள்.

சிறீலங்கா அரசினது தொல்லியல் திணைக்களம் இந்தக் கட்டிடத்தை மரபுரிமை இடமாக தற்போது அடையாளப்படுத்தியுள்ளது. மந்திரிமனையைச் சீர்படுத்தும் திட்டங்களும் சிறீலங்கா தொல்லியல் திணைக்களத்திடம் உண்டு. (இன்னும் புத்தர் சிலை வைக்கப்படவில்லை.).

இருந்தும் மந்திரிமனையிருக்கும் நிலத்தின் உரிமையாளர்கள் இந்நிலத்தை சட்டரீதியாக உரிமைகோரும் நிலையிருப்பதால் தொல்லியல் திணைக்களமும்சரி, மாநகரசபையும்சரி மந்திரிமனையைச் சீர்படுத்த முடியாமல் இருக்கிறது என்றும் சமீபத்தில் பத்திரிகைச் செய்தி படித்திருக்கிறேன்.

எது எப்படியோ நம் மன்னர்கள் கட்டியவை என பெருமையடிக்க பெரும் கோட்டைகளோ அல்லது பெரும் கோயில்களோ யாழ்ப்பாண ராஜ்யப் பகுதியில் இல்லை. சிறிய அளவில் ஏதோ ஒன்றிரண்டு இருக்கிறதே என்ற ஆறுதலாக இந்த மந்திரிமனையைக் கண்டு மனம் திருப்திப்பட்டாலும், அதையும் பாதுகாக்கத் தெரியாத இனம் என்று நம்மை நாமே திட்டிக் கொள்ளும் வகையில்தான் மந்திரிமனை இன்னும் இருக்கிறது.

# அகஞ்சார் பண்பு நிலைகள்...

வடஇந்தியாவில் பஞ்சம் ஏற்பட்டபோதெல்லாம் ஆயிரக்கணக்கில் வடஇந்திய மக்கள் தமிழகத்துக்குள் நுழைந்திருக்கின்றார்கள். அவர்கள் இன்று தமிழர்களாகவே மாறி வாழ்ந்து வருகின்றார்கள். ஆங்கிலேயர் ஆட்சியின்போது கிறிஸ்தவ பாதிரியார்கள் வடஇந்தியாவில் செயற்படத் தயங்கினார்கள். அங்கே மதப்பணி ஆற்றச் சென்றோர் கொல்லப்பட்டனர். அவர்களுக்கு தமிழர் நிலமே பாதுகாப்பாக இருந்தது. இந்தியாவில் பலதடவை இந்து - இஸ்லாமிய மோதல்கள் நடைபெற்றுள்ளன. ஆனால் தமிழகத்தில் எந்த மோதல்களும் நடைபெறவில்லை. காரணம் தமிழர் கொண்டிருந்த மாந்தப் பொதுமையைப் போற்றும் பரந்த உலக மனப்பான்மையே.

இலங்கையில் இடம்பெறுகின்ற தமிழ் போராட்டம் குறித்து தனிநாயகம் அடிகளார் 1980ம் ஆண்டு ஆற்றிய சொற்பொழிவொன்றில் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“நாட்டில் ஒற்றுமையை விரும்பித் தமிழுக்கும் சமஉரிமை அளிக்க வேண்டுமென்று தமிழ் மக்களனைவரும் ஒரே குரலெழுப்பினர். இன்று இருபத்தைந்து ஆண்டுகட்குப்பின் நாம் எல்லாத் துறைகளிலும் ஒதுக்கப்பட்டுள்ளோம். நம் உரிமைகள் அனைத்தையும் இழந்து வாழ்கின்றோம். தந்தை செல்வா, ஈழத் தனிநாட்டை - தமிழ் ஈழத்தை - அக்காலத்தில் கேட்கவில்லை. ஆனால் நமக்கு இத்துணை ஆண்டுகளாக இழைத்து வந்த தீமைகளால் தனிநாடு கேட்கத் தூண்டப்பட்டோம்.”

இக்கூற்று தமிழர் போராட்டம் உலக மனப்பான்மைக்கு முரணாதல்ல என்பதை உணர்த்துகின்றது.

இக்காலத்தில் உலகெங்கும் புலம்பெயர்ந்துள்ள தமிழர்கள், பலவினத்தவரோடும் கூடி வாழ்வதற்கும் பிறவினத்தோரின் பண்பாடுகளை மதிப்பதற்கும் பரந்த உலக மனப்பான்மை என்ற பண்பே அடிப்படைக்காரணம் எனலாம்.




ALL YOUR
CATERING
NEEDS
CALL 416 - NANTHA 1 ext. 1
416 - 626-8421 ext. 1
FEEL GOOD
Taste Together
நந்தா உணவகம்
NANTHA RESTAURANT
INDIAN / CEYLON
TAMIL RESTAURANT IN GTA
Kipling & Steeles
(416-NANTHA-1 Ext. 2)
#18 - 5010 Steeles Ave W Etobicoke,
ON M9V 5C6
Warden & Finch
(416-NANTHA-1 Ext. 3)
Bridlewood Mall #106 - 2900 Warden Ave,
Scarborough, ON M1W 2S8
Middlefield & Steeles
(416-NANTHA-1 Ext. 4)
#2 - 2002 MiddleField Rd
Markham, ON L3S 1Y5
(Beside Fresh Food City Super Store)
(416-NANTHA-1 Ext. 5)
#8 - 2200 Brock Rd,
Pickering, ON L1X 2R2
Food Court - 6, Majestic City
(416-NANTHA-1 Ext. 6)
2900 Markham Rd, Scarborough, ON M1X 1E6
416 - NANTHA 1 | 416 - 626-8421
www.nantha.com

# உண்டியல்...

சில நேரங்களில் உண்டியலுக்குப் பதிலாகத் தட்டு ஒன்று இருக்கும். கிறிஸ்தவர்கள் கிறிஸ்மஸ் காலத்துக்கு அண்மித்ததாக கரோல் எனும் நிகழ்ச்சி நடத்துவார்கள். நத்தார் பப்பா வேசத்தில் ஒருவர் ஆடிப்பாடிக் குதூகலித்து உண்டியலில் காசு சேர்ப்பார். இதனை அடியொற்றிச் சைவசமயத்தைப் பின்பற்றுவோரும் தைப்பொங்கலை அண்மித்த நாள்களில் பொங்கல் கரோல் நடத்திப் பொதுத் தேவைக்காகப் பணம் சேர்க்கும் சில பிரதேசங்களும் உண்டு.

வங்கிகளில் கண்ணாடிப் பெட்டியில் சதுர வடிவில் செய்யப்பட்ட உண்டியல் மூலமாக நலிவுற்ற மக்கள் பிரிவினருக்கு நன்கொடை தேவையென வைக்கப்பட்டிருக்கும் உண்டியலையும் காண முடிகிறது.

2004 திசெம்பர் 26 இல் சுனாமிப் பேரலைகள் இலங்கை உட்படப் பல நாடுகளைத் தாக்கிப் பல்லாயிரம் பேரைப் பலி கொண்டு பேரழிவை ஏற்படுத்தியது. அப்போது வளர்ந்த நாடுகளின் மக்கள், பாடசாலைச் சிறார்கள் உண்டியல் குலுக்கிப் பெருந்தொகைப் பணத்தினைச் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் மூலமாக வழங்கி இருந்தார்கள்.

யுனிசெவ் போன்ற தொண்டு நிறுவனங்களும் இதே முறையைப் பின்பற்றி பணம் சேர்த்து ஏழ்மையில் வாடும் நாடுகளின் சிறுவர்களுக்கு வழங்குவது வழமையானது.

பணவசதியும் வாழ்க்கைத் தரமும் கூடக்கூட உண்டியல் என்ற சேமிப்பு முறையும் காணாமல் போகின்றது.

# Breadfruit (ஈரப்பலாக்காய்)...

nutrients reduce the risk of Alzheimer's disease. This benefit is because they reduce the oxidative damage caused by free radicals. Moreover, antioxidants protect the brain cells and tissues. They also slow down the development of the disease.

## Improves Reproductive Health

Breadfruit has Omega 3 and 6 fatty acids. Therefore, it improves both male and female fertility. A study showed that omega-3 fatty acids improve sperm motility. In addition, they help promote sperm synthesis.

Studies also suggest that omega-3 fatty acids improve PCOD in women. It also enhances insulin resistance. In addition, antioxidants present in breadfruit aid in preventing prostate and ovarian cancers.

## Prevents Cancer

Antioxidants such as vitamin A, vitamin C, and omega-3 fatty acids prevent cancer. Usually, cancer occurs due to the uncontrollable growth of cells, resulting from long-term free radical damage to the cells. As already stated, antioxidants help reduce the free radicals in the body. Thus, they prevent the growth and development of cancer. In addition, research has also demonstrated that antioxidants help destroy cancer cells.

## Helps in Weight Management

Breadfruit fits effectively in a weight loss diet plan. Breadfruit is full of dietary fibre, essential to weight management. In addition, fibre keeps one satiated for more extended periods. As a result, the urge to snack on unhealthy foods reduces. Therefore, it helps prevent unhealthy weight gain.

Moreover, breadfruit is a dense source of protein. It contains essential amino acids. Notably, it includes leucine, isoleucine and valine. They are vital in building up muscle. In addition, studies suggest that protein boosts metabolism. Thus, consuming breadfruit can help in losing weight Improve Skin Health

Vitamin C promotes collagen synthesis that improves skin elasticity. It also regenerates new skin cells. Additionally, studies have shown that vitamin C protects skin from sun damage. Therefore, it helps reduce the impact of harmful UVA and UVB rays- wrinkles, skin laxity, signs of ageing, etc. Thus one can conclude that eating this fruit safeguards you from skin changes linked to ageing. Since good skin results in a youthful appearance, adding breadfruit to the diet is a sure shot way to stay well-turned-out forever.

## Regulates Blood Pressure

Hypertension can lead to stroke or heart failure when worsened. As per research, the potassium in breadfruit has antihypertensive properties. It helps reduce the stress on blood vessels by widening the arteries. Therefore, this makes the blood flow easier. Thereby, it regulates blood pressure and prevents hypertension.

## Improves Bone Health

Breadfruit has very high mineral content. It also includes calcium, phosphorous, manganese, and magnesium. Research suggests that calcium and phosphorus are equally essential for healthy bones. They form a robust structure, improve bone density and prevent fractures. Ultimately, they reduce the risk of diseases like osteoporosis. Vitamin K in breadfruit also reduces the risk of bone disorders.

### Strengthens Immunity

We already know the benefits of antioxidants on immune function. Additionally, fibre also plays a role in immunity. Studies show that fibre acts as food for the good bacteria in the gut. Therefore, it helps in promoting good bacteria. Meanwhile, they also destroy harmful bacteria.Breadfruits reduce inflammation in the body. As a result, they improve the immune response to such pathogens and destroy them. They also help in regulating bowel movements. – BBC

# NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON
**416 321 6420**



- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters



உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
**கேதா**

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்

## Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், ‘இம்பிளான்ற்’ சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - FRIDAY**
**(416) 266-5161**
(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**
2466 Eglinton Avenue East, Unit #7
Scarborough, Ontario M1K 5JB



டாக்டர் எம்.கே. முருகானந்தன்

# உன் கண்ணில் நீர் வழிந்தால்...

கவலை வந்தால் கண்ணீர் வரும். ஆனால் கவலை இல்லாமலும் கண்ணீர் வருகிறது. உண்மையில் எந்த நேரமும் கண்களிலிருந்து கண்ணீர் சுரந்து கொண்டே இருக்கிறது. இது இயல்பானது. ஆனால் சிலருக்கு சிலவேளைகளில் கண்ணிலிருந்து நீர் அதீதமாக வழிகிறது. இது ஏன்?

காரணம் என்னவென்றால், கவலையை வெளிக்காட்டுவதைவிட கண்களுக்கு மேலும் பல கடமைகள் உள்ளன:

கண்களை ஈரலிப்பாக வைத்திருப்பது முக்கிய கடமையாகும். கண்கள் ஈரலிப்பாக இருப்பதால்தான் கண்களை நாம் மூடித் திறக்கும்போதும், பார்வையைத் திருப்புதற்காக கண்களை ஆட்டும் பொழுதும் உராய்வு இன்றி வழுவழுப்புடன் அதனால் இயங்க முடிகிறது.

கண்களுக்கு தேவையான போசணையில் ஓரளவு அதனூடகவும் கிடைக்கிறது. தூசி மற்றும் உறுத்தக் கூடிய பொருள்களிலிருந்து கண்களைப் பாதுகாக்கிறது.

கண்கள் மாசு மறுவின்றி பளிங்கு போல கண்ணீரினால் பேணப்படுவதால்தான் எமது பார்வை தெளிவாக இருக்கிறது.

கண்ணில் தொற்று நோய்கள் ஏற்படாமல் காப்பதும் கண்ணீர்தான்.

எமது கண்களின் மேல் மடலுக்கு கீழே பல சிறிய கண்ணீர் சுரப்பிகள் உள்ளன. அவற்றிலிருந்து நாசிக்கு அருகே கண்களில் இருக்கும் நுண்ணிய துவாரங்கள் ஊடாகவே கண்ணீர் வருகின்றது.

இந்தக் கண்ணீரின் ஒரு பகுதி ஆவியாகி மறைந்துவிட, மிகுதி கண்ணீர்க் குழாய்களூடாக நாசியினுள் வழிந்து விடும். இது தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் வழமையான செயற்பாடு. இக் குழாய் அடைபடுவதாலும் கண்ணீர் அதிகமாக வழியலாம்.

### திடீரென அதிகமாக கண்ணீர் வடிதல்

ஆனால் நாம் உணர்ச்சிவசப்படும்போதும், கண்களுக்குள் ஏதாவது விழுந்து உறுத்தும்போதும் அதிகமாகக் கண்ணீர் வடிகிறது. இது வித்தியாசமான செயற்பாடு. இது கண்ணீர்ச் சுரப்பியிலிருந்து வெளியேறுகிறது. இது தற்காலிகமாக நடைபெறுவதாகும்.

தொடர்ந்து ரி.வி. பார்க்கும்போது அல்லது கணினியில் வேலைசெய்யும்போது கண்ணீர் வடிகிறது எனப் பலர் சொல்வதைக் கேட்கிறோம். இதற்குக் காரணம் என்ன?

வழமையாக எமது கண்கள் அடிக்கடி இமைக்கிறது. அதாவது தானாகவே வெட்டி மூடுகிறது. இச் செயற்பாட்டின்போது மேலதிக கண்ணீர் கண்ணீர்குழாய் ஊடாக வெளியேறிவிடுகிறது.

ஆனால் தொடர்ந்து உற்றுப் பார்க்கும்போது கண்களை வெட்டி மூடும் செயற்பாடு குறைகிறது. இதனால் கண்ணீர் குழாய் ஊடாக வடிவது குறைந்து தேங்குவதாலேயே கண்ணீராக வடிகிறது.


கண்ணில் கிருமித்தொற்று (Conjuntivitis) ஏற்படும்போதும் கண்களிலிருந்து நீர் போல வடிவதுண்டு.

### தொடர்ச்சியாக கண்களிலிருந்து நீர் வழிதல்

ஆனால் இதைத் தவிர நீண்டகாலத்திற்கு தொடரும் அதிக கண்ணீர் சுரப்பதை chronic epiphora என்பார்கள். இவ்வாறான நீண்டகாலம் தொடரும் கண்ணீர் சுரப்பதற்கு மருத்துவ ஆலோசனை பெறுவது அவசியமாகும்.

### தொடர்ந்து கண்ணீர் வழிதலின் காரணங்கள்:

சூழல் காரணமாகலாம். இரசாயனப் பொருட்கள், புகை, வெங்காய மணம் போன்ற கண்களை உறுத்தக் கூடிய ஏதாவது ஒன்று காரணமாகலாம்.




ஒவ்வாமை காரணமாகலாம். சுழலிலுள்ள தூசி, மகரந்தம் போன்றவற்றால் ஏற்படும் ஒவ்வாமை (Kernal Conjunctivitis) காரணமாகலாம். குளுக்கோமா போன்ற ஏதாவது கண் நோய்களுக்கு தொடர்ந்து கண்களுக்கு ஊற்றும் துளி மருந்துகள் கூட சிலருக்குக் காரணமாகலாம்.

கண்நோய் எனப்படும் கண்களில் ஏற்படும் கிருமித் தொற்று (infective conjunctivitis) மற்றொரு காரணமாகும். வைரஸ் கிருமித் தொற்று எனில் நீர்போலவும், பக்ரீரியா தொற்று எனில் சற்றுத் தடிப்பாக பூளையாகவும் வரும். காலையில் கண் விழிக்கும்போது அதனால் கண்கள் ஒட்டிக்கொண்டிருக்கும். அன்ரிபயடிக் கண்துளிகளை மருத்துவர் தருவார்.

ஓரிரு இமை முடிகள் உட்பக்கமாக சிலருக்கு வளர்வதுண்டு. Entropion என்பார்கள். இதுவும் மற்றொரு காரணமாகும்.

வரட்சியான கண்கள் முக்கிய காரணமாகும். வயதாகும்போது பொதுவாக ஏற்படும் பிரச்சனை இதுவாகும். அடிக்கடி கண்களை வெட்டி மூடுதல், கடுமையாக காற்று வீசுமிடங்களைத் தவிர்த்தல், புகைத்தலை நிறுத்தல் போன்றவை உதவும். செயற்கைக் கண்ணீரை (Artificial tears) உபயோகிப்பதும் உதவும்.

கண்ணீர்க் குழாயில் ஏற்படும் அடைப்புகளால் வழமையாக நாசிக்குள் வழிவது தடைப்படுவதால் கண்ணீராக ஓடக் கூடும். இதற்கு சிறிய சத்திரசிகிச்சை உதவும். மாறாக நுண்துவாரங்களில் ஏற்படும் அடைப்பு மருத்துவர் நீரினால் கழுவுவதன் மூலம் அகற்றுவார். சில குழந்தைகள் பிறக்கும்போது அக்குழாய் முழுமையாக வளர்ச்சியடையாததால் கண்ணீர் தொடர்ந்து வரும். சில வாரங்களில் அக் குழாய் முழுமையாக வளர்ந்ததும் கண்ணீர் பெருகுவது குறைந்துவிடும்.


OIL CHANGE SPECIAL $34.95
+ Tax & Disposal Fees
Semi-Synthetic Oil Change includes:
Up to 5 L Standard Motor Oil
New Filter
Free Vehicle Inspection
Complete Front & Rear Brake Replacement or $25 off on each
$50 OFF
FREE!
BRAKE OR SHOCK INSPECTION
LIMITED TIME OFFER
SEE STORE FOR DETAILS
MY MECHANIC
இப்போது
இரண்டு இடங்களில்!
MY MECHANIC AUTO & TIRE
4530 Steeles Avenue East
Markham, ON L3R 0L2
905-946-1000
1095 Ellesmere Road,
Scarborough ON M1P 2WP
416-757.1000
info@mymechanicauto.ca
mymechanicauto.ca


உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..
தகுதியான வெற்றிகளுக்கான
தரமான தெரிவு
On high with your thoughts
PRO MAR Ltd.
AWARDS & PROMOTIONS
நகரின் முன்னணித் தமிழர் நிறுவனம்
இப்பொழுது
வீடு விற்பனைத்
துறையிலும்
www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

ISSN 1206-0585

